பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

குறைந்த செலவில் கனடாவில் உயர் கல்வியைத் தொடர
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (இ/400)
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 09, செவ்வாய்க்கிழமை 23.05.2017 கதிர் 198

# சிங்களத் தீவிர அட்டகாசத்துக்கு எதிராக முஸ்லிம்கள் போர்க் கொடி

## எம்.பிக்களும் அமைச்சர்களும் அரசுத் தலைமை மீது சீற்றம்

கொழும்பு, மே 23

**அண்மைக் காலமாக பௌத்த, சிங்களத் தீவிரவாத அமைப்புகளால் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதப் போக்கில் முன்னெடுக்கப்படும் அட்டகாச நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு நல்லாட்சி அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி முஸ்லிம் எம்.பிக்களும், அமைச்சர்களும் தமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர்.**

பக்கம் 18 »

## உண்ணா விரதத்தை கைவிட்டார் ஞானசார தேரர்



தம்மை அடாவடித்தனமாகக் கைதுசெய்ய முயற்சிக்கின்றார்கள் என்று தெரி

பக்கம் 18 »

## கைதுக்கு வலியுறுத்தாதீர் என மனோவுக்கு ஞானசாரர் தூது!

கொழும்பு, மே 23

தன்னைக் கைதுசெய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்த வேண்டாமென அமைச்சர் மனோ கணேசனுக்குத் தூதனுப்பியுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞான சாரதேரர்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான மேல் மாகாணத்திலுள்ள

பக்கம் 18 »

## முஸ்லிம்களின் சொத்துக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள்?

கொழும்பு, மே 23

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை பௌத்த, சிங்களத்தீவிரப் போக்கு அமைப்புகள் ஒருபுறம் கக்கிக் கொண்டிருக்க, மறுபுறம் முஸ்லிம்களின் சொத்துக்களை இலக்கு வைக்கும் தாக்குதல்களும் மீளத் தொடங்கியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அம்பாறையில் செயல

பக்கம் 18 »

## பிரதி இராஜாங்க அமைச்சர்களின் அணியும் விரைவில் மாற்றப்படுமாம்!

கொழும்பு, மே 23

பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் அணியிலும் பல மாற்றங்கள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரதி அமைச்சர்களின் அணியில் மாற்றம் இடம் பெற உள்ளமை பற்றிய தகவல் தங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகப்

பக்கம் 18 »

## புதிய அமைச்சர்கள் விவரம்

கொழும்பு, மே 23

நேற்று புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர்களின் விவரம் வருமாறு:-

மங்கள சமரவீர - நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர்.

எஸ்.பி. திஸாநாயக்க - சமூக வலுவூட்டல், நலன் பேணல் மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சர்.

டபிள்யு. டீ. ஜே. செனவிரத்ன - தொழில், தொழில் உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்.

ரவி கருணாநாயக்க -

பக்கம் 18 »

## அமைச்சரவை மாற்றம்

# ரவியின் நிதி அமைச்சு மங்களவுக்கு; மங்களவின் வெளிவிவகாரம் ரவிக்கு!

## 9 அமைச்சர்களுக்குப் புதிய பொறுப்புக்கள்



கொழும்பு, மே 23

எதிர்பார்க்கப்பட்டபடி அமைச்சரவை மாற்றம் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.

நிதி அமைச்சராக விருந்த ரவிகருணாநாயக்க வெளிவிவகாரத்துக்கும், வெளிவிவகார அமைச்சராக இருந்த

பக்கம் 18 »

## வாசுதேவ நாணயக்கார வைத்தியசாலையில்



கூட்டுஎதிரணி எம்.பியும் மூத்த அரசியல்வாதியுமான வாசுதேவ நாணயக்கார இருதயம் தொடர்பான நோய் காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டார். அவரின் நிலை சுமுகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நேற்றுப் பதவியேற்ற புதிய அமைச்சர்கள்

## பஸ் விபத்தில் 36 பேர் படுகாயம்

கொழும்பு, மே 23

நிக்கவரெட்டியப் பிரதேசத்தில் நேற்று ஆடைத் தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி மோசமாகச் சேதமடைந்ததில் 36 பேர் படுகாயமடைந்தனர்.

அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## 9 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் தலை மன்னாரில் கைது!



கொழும்பு, மே 23

தலைமன்னாரில் 9.2 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை மன்னார்ப் பொலிஸாரும்,

பக்கம் 18 »

## 327 கிலோ கேரளக் கஞ்சா களனிமுல்லவில் சிக்கியது!



327 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் நான்கு பேர் களனிமுல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்

பக்கம் 18 »

## அளப்ப அருணாசலம்



அப்ப... உது கஞ்சா கொழிக்கும் பூமி எண்டு சொல்லுங்கோ...!

## திருகோணமலை தம்பலகாமத்தில் முதலைக்கு இளைஞர் இரை!

திருமலை, மே 23

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துநகர் சிவப்புப்பாலம் பகுதியில் நேற்று அதிகாலையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மூன்று இளைஞர்களுள் ஒருவரை முதலை ஒன்று இடுப்புடன் கவ்வி இழுத்துச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒலகமுவ பகுதியைச் சேர்ந்த ஹலாஸ்டீன் முகமட் றிஸ்கான் வாஹிட் (வயது 19) என்பவரே முதலையிடம் சிக்கிக் காணாமற் போயிருக்கின்றார்.

பக்கம் 18 »

# போர் வெற்றி தினத்தில் நினைவேந்தல்; இலங்கைக்கு இது பெரும் சாபக்கேடு!

## நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே 23

போர் வெற்றி தினத்தை நாம் கொண்டாடி வரும் நிலையில் மறுபுறம் வடக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை இலங்கைக்கு சாபமாக அமைந்துள்ளது. அரசு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்குமாயின் சுதந்திர தினத்தில் போர் வெற்றி தினத்தையும் கொண்டாட முடியும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

போர் வெற்றி தின நிகழ்வுகள் கொண்டாடப் பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரை வெற்றி கொண்டதில் மஹிந்த, கோட்டாபய ஆகியோரின் பங்களிப்புக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

நாட்டின் கொடிய போரை முடிவுக்குக் கொண்டுவந்த நடவடிக்கையில் முன்னைய அரசில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நகர்வுகள் மிகவும் மதிக்கத்தக்கவையாகும். அதே போல் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு படைகளையும் நாம் மதிக்க வேண்டும்.

அவர்களின் முயற்சி இல்லாது இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியாது. அதே போல் போர்வெற்றி தினத்தை கொண்டாடும் போது நாம் அரசியல் பிரிவினை இல்லாது அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும்.

இந்த நிகழ்வில் பாகுபாடு இருக்கக் கூடாது. போரை வெற்றி கொண்டதில் அவர்களின் பங்களிப்புக்கும் முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும். இராணுவ வெற்றி தினம் ஒரு புறம் நாம் கொண்டாடிய போதிலும் மறுபுறம் ஓர் இனம் தமது இன அழிப்பு தினமாக இதனை நினைவு கூர்ந்து வருகின்றது.

ஆகவே இவ்வாறான ஒரு மோசமான நிலைமையில் நாம் செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இலங்கையின் சுதந்திர தினம் போன்ற ஒரு தினத்தில் பெப்ரவரி 4 ஆம் திகதியை இந்த தினமாகவும் இணைத்து எம்மால் கொண்டாட முடியுமாயின் அதுவே இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் அமையும்.

ஆகவே, அரசு கொள்கை ரீதியில் ஒரு தீர்மானம் எடுக்குமாயின் அனைவரும் பொதுவான ஒரு தினத்தில் இராணுவ வெற்றி தினத்தையும் கொண்டாட முடியும். வடக்கில் பொது மக்கள் தமது உறவுகளை நினைவு கூர எந்தத் தடையையும் நாம் விதிக்கவில்லை. இறுதிப் போரில் பொது மக்கள் இறந்தனர்.

அவர்களை நினைவு கூருவது தவறில்லை. ஆனால் புலிகள் இலங்கையில் தடை செய்யப்பட்ட ஓர் ஆயுத அமைப்பாகும். அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை. அதையும் அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். எனினும் அமைதியான வகையில் மக்கள் செயற்பட்டு வருவார்களாயின் அரசு அவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படும்.

நாட்டின் இன ஐக்கியம், தேசிய ஒற்றுமை என்பவற்றைப் பலப்படுத்த வேண்டும். அதில் அதிக அக்கறையுடன் அரசு செயற்பட்டு வருகின்றது. அதேபோல் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் வகையில் நாம் மிகவும் விரைவான நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் ஒருசிலர் தொடர்ந்தும் இன வாதத்தைக் கையில் எடுத்து கொண்டு சில மோசமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். கருத்துக்களைத் தெரிவிக்க சகலருக்கும் உரிமையுள்ளது.



ஆனால் முன்வைக்கும் கருத்துக்கள் மூலம் நாட்டில் எந்த சந்தர்ப்பத்திலும் குழப்பங்கள் ஏற்படக் கூடா. நாட்டின் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தும் சகல நகர்வுகளையும் அரசு என்ற ரீதியில் நாம் முன்னெடுத்து செயற்படுவோம்.- என்றார். (எ)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வு

கிளிநொச்சி, மே 23

இலங்கை குடியரசுதின நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. இதன் போது அரச அதிபர் தலைமை உரை ஆற்றுகையில்:-

'1948 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியிலிருந்து இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து மீண்டபோதிலும் தொடந்தும் பிரிட்டன் அரசின் கிரீடத்தின் கீழ் டொமினிக் நிலைமையுடைய சுகந்திரமொன்று மட்டும் உரித்தாக இருந்தது.



ஆனால் 1972 ஆம் ஆண்டின் குடியரசுர அரசமைப்புடன இலங்கை மக்களுக்குப் பொறுப்பு கூறுகின்ற முழுமையான இறைமையுடைய மற்றும் சுதந்திர அரசாக மாறியது.'-என்று தெரிவித்தார்.

## நல்லாட்சி தொடர்பில் டாக்காவில் உரையாற்றுகிறார் சந்திரிகா!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நான்கு நாள் விஜயத்தைமேற்கொண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்கு நல்லாட்சி தொடர்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.



பங்களாதேஷிலுள்ள சர்வதேச மூலோபாய ஆய்வுகள் தொடர்பான நிறுவனத்தில் 'பிளவுபட்ட சமூகத்தினிடையே சமரசம், ஜனநாயகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லாட்சி என்பன தொடர்பில் இலங்கையிடம் இருந்து பாடத்தை கற்றுக் கொள்ளல்' என்ற தலைப்பில் அவர் இன்று காலை உரையாற்றவுள்ளார்.

இந்த நிறுவனம் பங்களாதேஷ் அரசுக்குச் சொந்தமான தேசிய ஆய்வு மற்றும் ஆய்வு நிறுவனங்கள் மூலமான விடயங்களை மேம்படுத்துதல், சர்வதேச விவகாரம், பாதுகாப்பு அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பழ அறுவடை ஏற்றுமதி குறித்த செயலமர்வு

கொழும்பு, மே 23

பழ அறுவடை ஏற்றுமதி தொடர்பான ஒருநாள் செயலமர்வு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவை நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

பழ உற்பத்திக்குப் பின்னரான அறுவடைக்கான தொழில்நுட்பம், ஏற்றுமதிக்காக களஞ்சியப்படுத்தல் ஆகியன தொடர்பில் இத் தொழில் துறையைச் சார்ந்தோர் விளக்கமளிக்கவுள்ளனர். (எ)

## தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் போராட்டம் இன்னும் வலுவடையும்!

### அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் கருத்து

அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தி எமது போராட்டத்தை ஆட்சியாளர்கள் முடக்க முற்படுவதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் எமது போராட்டம் இன்னும் வலுவடையுமே தவிர, குறைவடையாது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.



மாலபே 'சைட்டம்' மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


எவ்வாறான தடைகளை ஏற்படுத்தினாலும் எமது போராட்டத்தை தடுக்க முடியாது. தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் போராட்டம் இன்னும் வலுவடையுமே தவிர குறைவடையாது.

எமது போராட்டம் தொடர்ந்துகொண்டே தான் இருக்கும். இதற்கு ஒருமுடிவுகாணவேண்டுமாயின் சைட்டம் மருத்துவ கல்லூரியை மூட வேண்டும்.-என்றார். (எ)

நிதி மோசடி குற்றச்சாட்டு:

## அளுத்கமகேயுக்கு பிணை; வெளிநாடு செல்லத் தடை!

நிதிமோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்த ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளு மன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.



கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற 39 லட்சம் ரூபா நிதி மோசடி உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது, 20 லட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அவரது வெளிநாட்டு பயணத்துக்குத் தடை விதித்த நீதிபதி சம்பத் விஜேரத்ன, கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதிவாதிகள் தரப்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருக்குமாயின் அவற்றை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ)

# அரசுக்கு எதிராக பட்டியல் தயாரித்து ஐ.நாவில் சமர்ப்பிக்க நடவடிக்கை

## எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று அறிவித்தார்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், அடக்கு முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற உறுதிமொழியுடன் ஆட்சிக்கு வந்த மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கம், தற் போது அவற்றுக்கு எதிராகவே செயற்படுகின்றது எனவடக்குமாகாண சபைஉறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மக்கள் நலன்கள் தொடர்பாக தான் முன்வைத்த கருத்துக்களைச் செவிமடுக்க மறுப்புத் தெரிவித்தார் எனவும் சிவாஜிலிங்கம் குற்றம்சாட்டினார்.

அந்தக் கலந்துரையாடலின் போது நான் சில கருத்துக்களை முன்வைப்பதற்காக எழுந்தேன். அப்போது எனது கருத்துக்களைக் கேட்க விரும்பாதவர் போலச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க, தனக்கு நேரம் சென்றுவிட்டது எனவும் விமானத்தில் போகவேண்டும் எனவும் கூறினார்.

ஆனால், அன்று அவர் கொழும்புக்குச் செல்லாமல் மறுநாள் வரை யாழ்ப்பாணத்திலேயே தங்கிநின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் இணைந்து பல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

அவ்வாறு நின்ற பிரதமர் எங்கள் கருத்துக்களைக் கேட்க மறுத்தமை ஏன்? மக்களின் பிரச்சினைகளைக் கேட்பதற்கு அவருக்கு நேரம் இல்லையா? –எனவும்சிவாஜிலிங்கம்கேள்வி எழுப்பினார்.

பல்வேறு கோரிக்கைகளின் நிமித்தம்போராட்டங்களை மக்கள் நடத்திக்கொண்டிருக்கின்றனர். அந்த மக்களின் பிரச்சினைகளைக் காண்பித்துத் தீர்வு பெற்றுக்கொடுப்பதை விடுத்து, பிரதமரை அழைத்துச் சென்று ஊர் சுற்றிக் காட்டுவதோ, அவரை 'நுங்கு குடிக்க வைப்பதோ இப்போது அவசியம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் தமிழர் விரோதப் போக்குத் தொடர்பாக பல்வேறு விடயங்கள் அடங்கியபட்டியல்ஒன்றைத் தயாரித்து, எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதஉரிமைகள்கூட்டத்தொடரில் அறிக்கையாகச் சமர்ப்பிப்பதற்கு வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. – எனவும் அவர் கூறினார்.

மேலும், அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்ற மக்களைப் படையினரோ, படைப் புலனாய்வாளர்களோ அச்சுறுத்தினால் அவர்கள் அதை மாகாண சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும். இது தொடர்பாக மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்த பணியாளர்களை நிறுவனம் ஒன்று பணி நீக்கம் செய்திருக்கின்றது. அது அடிப்படை மனித உரிமை மீறலாகும். அந்த நிறுவனம் அவர்களைமீளவும்பணியில்இணைக்காவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜீ.எஸ்.பி வரிச்சலுகை வழங்கப்பட்ட பின்னர் தெற்கில் முஸ்லிம்கள் மீதான சிங்கள இனவாத அமைப்புக்களின் தாக்குதல்கள்தொடர்பாகவும்இலங்கை அரசுடன்பேச இருக்கின்ற அதே வேளை, அது தொடர்பாகச் சர்வதேச நாடுகளிடம் முறையிடவும் தீர்மானித்துள்ளோம். – எனவும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (ம)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், மே 23

நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில் புலோப்பளை, அல்லிப்பளை, ஆரத்திநகர் ஆகிய இடங்களிலும் –

கிளிநொச்சிப் பிரதேசத்தில் வேராவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய இடங்களிலும்–

மன்னார் பிரதேசத்தில் பெரியநீலாச்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# குருநகர்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர்ப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ. ஆர். வி.) போடப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி, நாளை புதன் கிழமை :

★காலை 9 மணி முதல் 11 மணி வரை – கொண்டடி வீதிச் சந்தி.

★முற்பகல் 11மணி முதல் ஒரு மணிவரை – அடம்பன் வீதிச் சந்தி.

★பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை – யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாக. (இ)

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனை விட ஆபத்தானவர்

## இப்படிச் சொல்கிறார் ஞானசார தேரர்



கொழும்பு, மே 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை விடவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆபத்தானவர் எனப் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க 'வஞ்சகமான நரி' எனப் புலிகளின் தலைவர்பிரபாகரன் கூறியதன் அர்த்தம் தற்போதுதான் புரிகின்றது எனவும் அவர் கூறினார்.

கண்டியில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

இந்தியாவின் காலனித்துவ நாடாக இலங்கையை மாற்றுவதற்கான முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

இதற்காக எட்கா எனும் உடன்படிக்கையைக் கையில் எடுத்துள்ளார். 1970, 1971, 1988 மற்றும் 1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கூட்டுப் படுகொலைகளுடன்பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவிற்கு தொடர்பு உண்டு.

இந்நிலையில், தற்போது இந்தியாவுடனான எட்கா உடன்படிக்கை மூலம் மீண்டும் ஒரு கூட்டுப் படுகொலைக்கு ரணில் தயாராகி விட்டார் என வண. ஞானசாரதேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# சைட்டம் தொடர்பாக பத்திரிகைகளுக்கு செய்தி, கட்டுரைகள் வெளியிடக்கூடாது

## ஜி.எம்.ஓ.ஏ. தலைவருக்கு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மே 23

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் பாதெனியவுக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, வழக்கு முடியும் வரை வழக்குத் தீர்ப்புத் தொடர்பான விமர்சனங்கள், பத்திரிகை பிரசுரங்கள், கட்டுரைகளை வெளியிடக்கூடாதுஎனப்பாதெனியவுக்கு இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிமாணவர்களுக்கு அரச மருத்துவமனைகளில்சேவைக் காலப்பயிற்சிவழங்கநடவடிக்கை எடுக் குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சுகாதார அமைச்சுக்கு உத்தரவிட்டிருந்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவரான மருத்துவர் பாதெனிய இதற்கு எதிராக கருத்து வெளியிட்டிருந்தமையுடன், மாலபே தனியார் மருதது வக் கல்லூரி மாணவர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி வழங்க அரச மருத்துவமன்னைகளில் இடமளிக்கக் கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

மேலும், மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அரச மருத்துவர்கள் தொடர்ச்சியாகவேலைநிறுத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பாதெனிய உள்ளிட்ட அரச மருத்துவர்களின் இச்செயற்பாடு நீதிமன்ற அவமதிப்புக்கு ஒப்பானது என்று மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான குற்றப்பத்திரிகையை மருத்துவர் பாதெனியவுக்குக் கையளித்துள்ளது. அதையடுத்து அந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# வடக்கு மக்களின் காணிகள் தொடர்பான ஜனாதிபதியின் கருத்து கவலைக்குரியது

## வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். – வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளை 6 மாதங்களில் மக்களிடம் வழங்குவேன் எனக் கூறிய ஜனாதிபதி ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும் தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. மாறாக வடக்கில் காணிகளை விடுவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற மாதிரியும் கிழக்கு மக்கள் காணிகளைகேட்கவில்லைஎனவும் கூறுகின்றமை கவலைக்குரியது.

இவ்வாறு, வலி. வடக்கு மீள் குடியேற்ற குழுத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளருமான சண்முகலிங்கம் சஜீவன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு எதிராக, அவரது யாழ்ப்பாண விஜயத்தின்போது கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வலி. வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில்கருத்துதெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

ஆட்சி மாற்றத்தின் பின் யாழ். வந்த ஜனாதிபதி வலி. வடக்கு மக்களைச் சந்தித்தமையுடன், வலி. வடக்கு மக்களின் முகாம்களுக்கும் சென்றிருந்தார். இதன்போது அவர் 6 மாதங்களுக்குள் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

அதேவேளை, பிரதமரும் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த போது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கூறினார். மேலும், மக்களின் காணிவிடுவிப்புபோராட்டங்களிலும் கலந்து கொண்டார்.

இன்று அவர்களே வடக்கில் காணிப் பிணக்குகள் இல்லை என்றதோறணையிலும், கிழக்கு மக்கள் காணிக்காகப் போராட்டம் நடத்தவில்லை, வடக்கு மக்கள் தேவைக்கு அதிகமாகவே காணிகளைக் கேட்கிறார்கள் எனவும் கூறுகின்றமை வருத்தமளிக்கிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கருத்துக்களை நம்பியிருந்த மக்களுக்கு ஜனாதிபதியின் கருத்துக்கள் வருத்தமளிக்கின்றன.

ஜனாதிபதியும் பிரதமரும் தொடர்ந்தும் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் அடுத்த தடவை அவர்கள் யாழ்ப்பாணத்திற்குவரும்போதுகறுப்புக்கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிப்போம். – என்றார். (ம)

# நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்

நல்லூர், மே 23

நல்லூர்பிரதேசசபைக்கு உட்பட்ட சகல வர்த்த நிலையங்களிலும் உள்ள நிறுவைகள், அளவைகள் மற்றும் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது எனப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்றும் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியிலுள்ள நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்தில் முத்திரையிடும் பணி இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, சகல வர்த்தகர்களும் தவறாது வருகைதந்து தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-07)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# இதுவும் மனித உரிமை மீறலே...!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வொன்றை ஒழுங்கு படுத்திய - நீண்ட கால மனித உரிமைச் செயற்பாட்டாளரான - வண. பிதா எழில்ராஜன் மீது விசாரணை என்னும் பெயரில் தொடர்கின்ற அச்சுறுத்தல்கள் குறித்து, தமிழ் மக்கள் பேரவை கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் பேரவை சுட்டிக்காட்டியுள்ள சில விடயங்கள் கவனிக்கப்படவேண்டியவையாக உள்ளன.

வண. பிதா எழில்ராஜன் சிவில் சமூக அமைப்பின் பேச்சாளர்; மனித உரிமை ஆர்வலர்; மக்களுக்காகக் குரல் எழுப்பும் வெகுஜனப் பிரதிநிதி. பல தரப்புகளினாலும் நன்கு அறியப்பட்ட - மதிக்கப்பட்ட - ஒரு சமூகத் தலைவர்.

வன்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட தமது தமிழ் உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்த 'தவறுக்காக' மட்டுமே அவர் இவ்வாறு அலைக்கழிக்கப் படுகின்றார்; துன்பப்படுத்தப்படுகின்றார்.

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று தடவைகள் பொலிஸ் நிலையங்களுக்கு அலைக்கழிக்கப்பட்டு தொந்தரவுக்குள்ளாக்கப் பட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல, இந்தத் தவறுக்காக அவரது வயோதிப - முதிய - பெற்றோரும்கூட துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பல்வேறு இடர்களிலும் தனித்தும், பிரிந்தும் வெவ்வேறாயும் இத்தகைய உணர்வுபூர்வ விடயங்களை நாம் கையாளும்போது, அந்தத் தனிப் பிரித்தலே எங்கள் மீதான அச்சுறுத்தல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் சட்ட முறையற்ற கையாளுகைகளுக்கும் வழிவகுத்துவிடும் என்ற அடிப்படையில் பேரவை சுட்டிக்காட்டும் விடயம் ஊன்றிச் சிந்திக்கப்பட வேண்டியதே.

இத்தகைய நினைவேந்தல்கள் போன்றவை ஒருங்கிணைக் கப்பட்ட வகையில் - ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பின் பங்காகச் செயற்படுத்தப்படும்போது - மேற்படி அச்சுறுத்தல்கள், அழுத்தங்களைக் கையாள்வது சுலபமாகும்.

உயிரிழந்த தனது உறவை -தனது உற்றாரை - நெருங்கிய பந்தத்தை - நினைவுகூர்வது என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை.

முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூட இந்த உரிமை மதிக்கப்படவேண்டியது என்பதை அழுத்திக் கூறியிருக்கின்றார். அப்படி உயிரிழந்தவர்களின் நினைவாக ஒரு தீபம் ஏற்றுவதால் தேசிய பாதுகாப்புக்கு எந்தக் குந்தகமும் வந்து விடாது என்றும் அவர் கூறியிருக்கின்றமை அவதானிக்கப்பட வேண்டிய விடயம்.

இத்தகைய நினைவுகூரல் உரிமையை மறுதலிப்பது என்பது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

இந்த மனித உரிமை மீறலுக்கு - அச்சமூட்டித் தடுக்கும் நடவடிக்கைக்கு - பின்னால் பொதிந்துகிடக்கும் உண்மையையும் தமிழ் மக்கள் பேரவை சுட்டிக்காட்டத் தவறவில்லை.

வண. பிதா எழில்ராஜன் போன்றோரை அச்சுறுத்துவதன் மூலம், இப்படியான நினைவேந்தல் நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்களுக்கும், கலந்துகொள்பவர்களுக்கும் ஆளும் அதிகாரத் தரப்பு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றது.

நீங்களும் இத்தகைய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அல்லது அதில் பங்கு கொண்டால் இதே அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவீர்கள் என்ற செய்தியே அது.

ஒட்டுமொத்த மக்களிடையேயும் ஓர் அச்சத்தை ஏற்படுத்தி, பதற்றத்தை உருவாக்கி, அந்த மக்கள் தாமாகவே இத்தகைய முயற்சிகளில் ஈடுபடாமல் உறுதிசெய்வதே ஆளும் தரப்பின் ஒவ்வாத எத்தனமாகும்.

போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவுகூரக்கூட இடமளிக்காமல், தமது அதிகாரத்தைத் திணித்தது கொழும்பில் ஆட்சியிலிருந்த முன்னைய மஹிந்த அரசு. அதற்கு நேரடி வன்முறையை அந்த அரசு பிரயோகித்தது.

ஆனால், 'நல்லாட்சி' எனும் தற்போதைய அரசு, வன்முறை அழுத்தத்துக்குப் பதிலாக உளவியல் போர் ஒன்றை நம் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. உளவியல் போரின் அங்கமான மறைமுக அழுத்தங்கள் மூலம் நினைவுகூரல்களைத் தடுக்க முடியும் என அது கருதுகின்றது போலும்.

வண. பிதா எழில்ராஜன் மீதான கொடூரங்கள் இதனையே எடுத்துக்காட்டுகின்றன.

நல்லிணக்கம் எனக் கூறிக்கொண்டு, நல்லிணக்கத்தின் முக்கிய அம்சமான நினைவு கூரலைக் கூடத் திட்டமிட்ட முறையில் மறுதலிக்கின்றமை, இந்த அரசுக்கு நல்லெண்ணத்தை ஏற் படுத்தும் நோக்கம் அறவே இல்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

சமூகச் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதன் மூலம் அரசு அடையப்போவது ஒன்றுமில்லை - சர்வதேச சமூகத்தின் விருப்பமற்ற எதிர்வினையைச் சம்பாதிப்பதைத் தவிர.

மக்கள் தம் உறவுகளை நினைவு கூர்வதற்கு உரிமை உடையவர்கள் என்றால், அதற்கான நினைவுக்கல்லை நடுவதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. உயிரிழந்தவர் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியாக இருந்தால் கூட அவரையும் அவரது உறவுகள் நினைவு கூர உரிமை உண்டு. அதைத் தடுப்பது மனித உரிமை மீறலின்றி வேறில்லை.

நல்லாட்சி என்று தனக்குத் தானே பட்டம் சூட்டுவது நஞ்சுத்தனமன்றி வேறல்ல.

# புலிகளுக்கு உதவுமாறு 'றோ'வுக்கு பணித்திருந்தார் இந்திராகாந்தி !

## சர்வதேச ஊடகங்களுக்கு கே.பி. செவ்வி

கொழும்பு, மே 23

விடுதலைப் புலிகளுக்கு உதவுமாறு இந்திய உளவுப் பிரிவான 'றோ'விற்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பணித்திருந்தார் என்று விடுதலைப் புலிகளின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினரும் சர்வதேச ஆயுதக் கொள்வனவாளருமாகக் கருதப்படும் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே கே.பி. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் அமரர் எம்.ஜீ.ராமச்சந்திரனும் விடுதலைப் புலிகளுக்கு பணம் உள்ளிட்ட வழிகளில் ஆதரவளித்திருந்தார் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பல செயற்பாடுகளுக்கு கே.பி. உறுதுணையாக இருந்தார் என்று ஏற்கனவே குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், விடுதலைப் புலிகளின் பெருமளவான தங்கம் கே.பியிடம் இருந்தது என்றும், அதனை கடந்த மஹிந்த அரசுடன் அவர் பங்கிட்டுக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கான வெடிபொருள்களை சிங்கப்பூரிலிருந்து இந்தியாவுக்கு கே.பி. அனுப்பிவைத்தார் என்று முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் குற்றஞ் சுமத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

# புகலிடம் கோரி விண்ணப்பிக்க நான்கு மாத கால அவகாசம்!

## ஆஸ்திரேலியா அரசு அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்குள் படகுகள் மூலம் பிரவேசித்துள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு, அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பதற்கு அந்த நாட்டு அரசு நான்கு மாத கால அவகாசம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது பாதுகாப்புக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டட்சன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து போருக்கு முன்னரும் போரின் பின்னரும் ஆபத்தான கடல் வழிப்பயணங்களை மேற்கொண்டு ஆயிரக்கணக்கானோர் ஆஸ்திரேலியாவில் புகலிட தஞ்சம் கோரியிருந்தனர்.

இலங்கையை தவிர ஏனைய ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதி தஞ்சம் கோரி, ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்த நிலையில், அகதிகள் தொடர்பான நெருக்கடி அதிகரித்ததை அடுத்து கடுமையான குடிவரவுக் கொள்கைகளை முன்னைய தொழிற்கட்சி அரசு நடைமுறைப்படுத்தியிருந்தது. ஆஸ்திரேலியாவின் தற்போதைய லிபரல் அரசு அவ்வாறான கொள்கையை பின்பற்றிவருகின்றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புகலிடம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்துள்ள சிலர் புகலிட விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவில்லை. ஏனையவர்கள் தமது அடையாளம் தொடர்பான அடிப்படைத் தகவல்களை வழங்க மறுக்கின்றனர்.

இந்நிலையில் 2012 முதல் 2014 வரையான காலப்பகுதியில் அகதிகளாக நாட்டுக்குள் வந்த 30 ஆயிரத்து 500 பேரில், இதுவரை 23 ஆயிரம் பேர் வரையானோர் சட்டபூர்வமான பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். எஞ்சிய சுமார் 7 ஆயிரத்து 500 பேர் முறையான காரணங்கள் இன்றி அகதிகள் அந்தஸ்தை பெறும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். எனவே அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவெடுக்கப் பட்டுள்ளது. - என்றார். (எ)

# சுதந்திர சதுக்கத்தில் அனுமதியில்லை; - ஏமாற்றம் அடைந்தது மஹிந்த அணி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை சுதந்திர சதுக்கத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் ஏமாற்றம் அடையும் நிலை அந்த அணியினருக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் இந்த நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் இந்த நிகழ்வை சுதந்திர சதுக்கத்தில் நடத்த இடமளிக்க முடியாது என்று கலாசாரத் திணைக்களம் அறிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து அந்த நிகழ்வு விஹாரமஹாதேவி பூங்காவின் புத்தர் சிலைக்கு அருகில் நடத்தப்பட்டது.

படைவீரர்களுக்கான தேசிய நிகழ்வு ஒன்றை நடத்த வேண்டியிருப்பதால் சுதந்திர சதுக்கத்தை வழங்க முடியாது என்று கலாசாரத்திணைக்களப் பணிப்பாளர் அனுசா கோகுல தெரிவித்திருந்தார்.

உலக ஸ்ரீலங்கா பேரவை, தேசிய படைவீரர் ஒன்றியம் மற்றும் தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சுதந்திர சதுக்கத்தை ஒதுக்கீடு செய்வதற்கு முற்பணமாக வழங்கப்பட்ட 7 ஆயிரம் ரூபா பணம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)


நாய்க் கடியிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள:
தடிகளையோ, கற்களையோ நாய்மீது எறியக்கூடாது.
பயம் காரணமாக நாய் கடிக்க முற்படலாம்
கடியுண்டால் உரிய முதலுதவியையும் உரிய சிகிச்சையும் பெற்றுக் கொள்வோம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ். மாநகர சபை.

நாளை
24.05.2017
புதன்கிழமை
நட்சத்திரம்: பரணி பி.ப 2.36 வரை
திதி: திரயோதசி கா. 6.49 வரை
சதுர்த்தசி பி.இ 4.34 வரை
சுபநேரம் : 4.22 - 5.52 வரை
இராகு காலம்: 11.52 - 1.22 வரை

# கனகராயன்குத்தில் முதலமைச்சரால் நினைவு முற்றம் திறந்து வைப்பு







வவுனியா கனகராயன்குளம் புதுக்குளம் பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் நேற்று நினைவு முற்றம் எனும் மண்டபத்தை திறந்து வைத்தார். அத்துடன் முதியோர் இல்லமொன்றுக்கான அடிக்கல்லையும் நட்டு வைத்தார்.

பேராசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் நினைவு முற்றம் மண்டபம் புதுக்குளம் கிராமத்தில் இறந்தவர்களை நினைவு கூறும் முகமாக அவர்களது படங்கள் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கிராம மக்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (இ-100)

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை, மே 23

வட்டுக்கோட்டை, துணவி தெவிண்டப்பிராய் முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி சப்பறத்திருவிழா. 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம். மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ)

★★★

கொடிகாமம், மே 23

மந்துவில் வடக்கு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணகிகு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை சம்பறத் திருவிழாவும், 8 திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஏ)

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக் கோரி மாணவர்கள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம்

## இலுப்பைக்குளம் அடைக்கல அன்னை வித்தியாலயத்தில்





வவுனியா, மே 23

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட செட்டிகுளம், இலுப்பைக்குளம் அடைக்கல அன்னை வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு வித்தியாலய மாணவர்கள் நேற்றுக்காலை 8 மணிக்கு பாடசாலையின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களின் போராட்டத்துக்கு பெற்றோரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எமக்கு தமிழ் பாட ஆசிரியர் இல்லை, கணித பாட ஆசிரியர் பற்றாக்குறை, ஆளுமை மிக்க அதிபரை நியமிக்கவும், பௌதீக வளப்பற்றாக்குறை' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவிக்கையில்:-

'எமது கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது, நாம் தமிழராகவிருந்தும் தமிழ்மொழியைக் கற்பிக்க ஆறு மாதங்களாக ஆசிரியர் இல்லை, இதனால் சதாரண தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளனர், உலகம் தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்த நிலையில் தொழில்நுட்பம் தொடர்பான எவ்வித கல்வியும் இன்றி நாம் உள்ளோம். எனவே ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

இதேவேளை தமது பிள்ளைகளின் கல்வி மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதாக தெரிவித்த பெற்றோர், அதிபரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாகவே தமது பாடசாலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

இந்தநிலையில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற இடத்துக்கு செட்டிகுளம் கோட்டக் கல்வி அதிகாரி வருகை தந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை கைவிடாத நிலையில் வட மாகாணசபை உறுப்பினர் செ. மயூரன் சம்பவ இடத்துக்கு வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரர்கள, பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடியதுடன் வடமாகாண கல்வி அமைச்சருடனும் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

இந்தநிலையில் தமக்கான நிரந்தரக் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர். மீண்டும் தமது போராட்டம் இன்று தொடரும் எனத் தெரிவித்தனர். (ஏ-100)

## மாற்று வலுவுடையோர் விவரம் திரட்டல்

யாழ்ப்பாணம், மே 23

மாற்று வலுவுடையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களுக்கான சேவைகளை வழங்கும் நோக்கிலும் பிரதேசச் செயலர் பிரிவு ரீதியாக அதற்கான விவரங்கள் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் கோரப்பட்டுள்ளமி.

சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டி, ஊன்று கோல் ஆகிய சாதனங்களைப் பயன்படுத்துவோரதும் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் படுக்கையில் இருப்போரினதும் விவரங்களை மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினரிடம் ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கடற்றொழிலாளர் வீடுகளை மறுசீரமைக்க நிதி உதவி

கடற்றொழிலாளர்களின் வீடுகளை மறுசீரமைப்பதற்காக 10 மாவட்டங்களில் குடும்பம் ஒன்றுக்கு தலா 3 லட்சம் ரூபா வீதம் நிதி வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வு கல்பிட்டி - உச்சமுனி கிராமத்தில் இடம் பெற்றது.

குச்சவெளி சலம்பை கிராமத்தில் முதல் கட்ட நடவடிக்கையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 100 வீடுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கடற்றொழிலாளர்களின் புனரமைப்பதற்கான திட்டத்தை முன்னெடுப்பதற்காக 30 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## கிளிநொச்சி, வவுனியாவில் பிரதிபலிப்புச் சிகிச்சை

பாரிசவாதம் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் பிரதிபலிப்புச் சிகிச்சை எதிர்வரும் 26 திகதி முதல் 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி ஆனந்தபுரம் தொழில்நுட்ப நிலையத்தில் மேற்கொள்ளப்படும்.

அதைத் தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரை வவுனியாவில் அமைந்துள்ள தம்பா ஹோட்டலிலும் மேற்படி சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

பிரபலிப்பு சிகிச்சை மூலம் பாரிசவாதம் போன்ற நோய்களைக் குணப்படுத்தலாம் என்கிறார் வைத்தியர் இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம்.

கிளிநொச்சியில் அவரது சிகிச்சையூர் செயல்முறை விளக்கமும் பெற்றுக் கொள்ள 0770169391 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் சிகிச்சை பெற விரும்புவோர் 0777 153963 எனற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ச)

## முகமாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; முக்கிய தடயப்பொருள்கள் கிடைத்தனவாம்

முகமாலை பகுதியில் பொலிஸ் வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்பான முக்கிய தடயப்பொருள்கள் கிடைத்துள்ளன என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமித் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகள் மூலமாக தாக்குதல் நடத்திய நபர்களின் தடயப்பொருள்கள் சில கிடைத்துள்ளன. அத்துடன் அந்தப் பகுதியில் தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் வாகனம் ஒன்றின் இலக்கத்தகடும் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளது. அத்துடன் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் துப்பாக்கியின் பாகங்கள் மற்றும் கையுறைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் முக்கியமான தடயங்கள் தமக்குக் கிடைத்துள்ள நிலையில் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை விரைவில் கைது செய்யமுடியும். - என்றார்.

# மணல் அகழ்வதற்கான அனுமதியை நிறுத்துமாறு கோரி

# ஏறாவூர்ப்பற்று மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

செங்கலடி, மே 23

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச எல்லைக்குள் மணல் அகழ்வதற்கான அனுமதியை உடனடியாக நிறுத்துமாறு கோரி நேற்றுத் திங்கட்கிழமை செங்கலடி பிரதேச செயலக முன்றிலில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இலுப்படிச்சேனை மற்றும் வேப்பவெட்டுவான் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் செங்கலடி - பதுளை வீதியை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.





இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் 'மணல் வியாபாரத்துக்கு அனுமதி வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்', 'நிறுத்து நிறுத்து மணல் அகழ்வை நிறுத்து', 'வாழவிடு வாழ விடு இயற்கையுடன் வாழ விடு', 'அழிக்காதே அழிக்காதே எங்கள் மண் வளத்தை அழிக்காதே', 'அரச அதிகாரிகள் ஒப்பந்தகாரர்களின் கூலிகளா?' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி இருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

இலுப்படிச்சேனைப் பிரதேசத்தை அண்டியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆறுகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்படுகிறது. இதனால் எமது நிலம் மற்றும் குடியிருப்புகள் அழிவடைகின்றன. மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. அனுமதிக்கப்பட்ட அளவிக்கு அதிகமாக மணல் கொண்டு செல்வதற்கு காவல் அரண்களிலுள்ள பொலிஸார் லஞ்சம் வாங்குகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். -என்றனர்.

மேலும், கோரிக்கைகள் அடங்கிய மகஜரை செங்கலடி பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதரிடம் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட செங்கலடிப் பிரதேச செயலாளர் பதில் அளிக்கையில் -

இந்த மகஜரில் அடங்கியுள்ள கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மணல் அகழ்வுக்கான அனுமதி வழங்குகின்றமை தொடர்பில் பிரதேச செயலகம் மாத்திரம் தொடர்புபட வில்லை. இது பல திணைக்களங்களுடன் தொடர்புபட்டது. தனிப்பட்ட ரீதியாக எந்த முடிவும் எடுக்க முடியாது. - என்றார். (ச)



## திருமலையில் குடியரசு தின நிகழ்வு!

திருகோணமலை, மே 23

திருகோணமலையில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் குடியரசு தின நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை அரச அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட அரச அதிபர் உரையாற்றுகையில் -

இன மத வேறுபாடுகளைக் களைந்து இலங்கையர் என்ற அடிப்படையில் அனைவரும் செயற்பட்டால், நாடு சகல துறைகளிலும் முன்னேற்றம் அடையும். சுதந்திரத்திற்கு முன்னர் எமது தலைவர்கள் இலங்கையர் என்ற அடிப்படையில் இணைந்து செயற்பட்டார்கள்.

உண்மையான சுதந்திரம் 1972ஆம் ஆண்டிலேதான் எமது தாய் நாட்டுக்கு கிடைத்தது. அதற்குப்பின்னர் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக எமது நாடு அபிவிருத்தி அடைந்த விதத்தைக் கண்டு நாம் திருப்தி கொள்ள முடியாது.

அரச அதிகாரிகளாகிய நாம் அனைவரும் தத்தம் கடமைகள் மற்றும் பொறுப்புக்களைச் செவ்வனே நிறைவேற்றும்போதே உரிய இலக்கை அடைய முடியும் .- என்றார். (ச)

# பிரதமரின் வாக்குறுதியை நிறைவேற்ற மத்திய, மாகாண அரசுகள் நடவடிக்கை

## மட்டு. பட்டதாரிகள் போராட்டத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்





மட்டக்களப்பு, மே 23

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாகாண அரசுகள் எடுத்து வருகின்றன எனக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை 90 ஆவது நாளாக இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், எஸ். வியாழேந்திரன், ஞா. ஸ்ரீநேசன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதல் கட்டமாக கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் பட்டதாரிகளை அரசசேவையில் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் உறுதியளித்துள்ள நிலையில், மாகாணசபை மூலமும் பட்டதாரிகளை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

### எம்மைச் சீண்டினால் போராட்ட வியூகம் மாறும்!

இதேவேளை, அம்பாறை மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் காரைதீவில் நேற்று 85 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் தொடர்பில் அம்பாறை மாவட்டப் பட்டதாரிகள் தெரிவிக்கையில்-

நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ இதுவரை எமது பிரச்சினை தொடர்பில் வாய் திறக்காதமை வேதனைக்குரியது. நல்லாட்சி என்றால் தமது மக்களின் பிரச்சினைகளை அவ்வப்போது இனங்கண்டு தீர்த்து வைக்க வேண்டும். எம்மைச் சீண்டினால் எமது போராட்ட வியூகம் மாறும். பெற்றோர்களுக்கு 150 ரூபா பெறுமதியான அல்சர் மருந்து கூட வாங்கிக் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் அவமானத்தோடு வறுமையில் நாம் வாடுகின்றோம்.- என்றனர். (ச)

# எனது அமைச்சுக்குள் ஞானசாரர் அடாவடியாக நுழைய முடியாது!

## எச்சரிக்கிறார் ஹரிஸ் எம்.பி.

சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக அடாவடித்தனங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஞானசார தேரர், எனது அமைச்சுக்குள் காலடி வைத்தால் விளைவுகள் வேறுவிதமாகவே அமையும் என விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற பாராட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'அமைச்சர் மனோ கணேசன் போல் என்னால் பொறுமையுடன் நடந்துகொள்ள முடியாது. அண்மைக்காலமாகச் சிறுபான்மைச் சமூகங்கள் மீதான இவர்களின் நடவடிக்கைகள் மோசமாக உள்ளன' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## இனவாதத்துக்குப் பணிந்து கைகட்டி நிற்கின்றது அரசு!

சிறுபான்மையினருக்கு எதிரான அட்டகாசங்கள் தலைவிரித்தாடுகின்ற போது, சட்டத்தை அமுல்படுத்த முடியாத அரசு இனவாதத்துக்குப் பணிந்து கைகட்டி நிற்கிறது' என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம். எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் ஆட்சியில் தற்போது அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இனங்களுக்கு மத்தியில் முறுகலை ஏற்படுத்துகின்ற நாசகாரக் கும்பல்களைக் கைது செய்ய வேண்டும். நாட்டின் உயர் மதிப்பு மிக்க சட்டங்களை அமுல்படுத்த முடியாத கையறு நிலையில் ஆளும் தரப்பு உள்ளது.

# எவ்வேளையிலும் கைதாவார் பொதுபல சேனாவின் ஞானசாரர்!



கொழும்பு, மே 23

சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் விரைவில் கைது செய்யப் படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வாரங்களாக முஸ்லிம்களுக்கு எதிரான 19 இனவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை குருநாகலில் பள்ளிவாசல் ஒன்றின் மீதும் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்தவாரம் அமைச்சர் மனோ கணேசனின் செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஞானசார தேரர், அமைச்சருக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இதுகுறித்து அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில், ஞானசார தேரரை கடந்த சனிக் இரவு குருநாகலில் கைது செய்வதற்கு பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். எனினும், பிடியாணை இல்லாததால் அவரைக் கைது செய்ய முடியவில்லை.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை கண்டி தலதா மாளிகையின் முன்பாக போராட்டம் ஒன்றில் இறங்கிய ஞானசார தேரர், அஸ்கிரிய பீடாதிபதியின் கோரிக்கையை அடுத்து அதனைக் கைவிட்டார்.

இந்த நிலையில், ஓரிரு நாள்களில் ஞானசார தேரர் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# கொழும்புத் துறைமுகத்தில் இந்தியக் போர்க்கப்பல்!



கொழும்பு, மே 23

இந்திய கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பலான ஐ.என்.எஸ். சுமேதா மூன்று நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கடற்படை மரபுகளுக்கமைய இந்தியக் கடற்படைக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் வரவேற்பு அளித்தனர்.

இந்தியக் கடற்படைக் கப்பலான சுமேதா கொழும்பில் தரித்து நிற்கும்போது, அதிலுள்ள இந்தியக் கடற்படையினர் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து, கூட்டுப் பயிற்சி, கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

இதற்கிடையே, இந்த ஆண்டில் இலங்கைக்கு துறைமுகப் பயணங்களை மேற்கொண்ட 20 ஆவது வெளிநாட்டுக் கடற்படைக் கப்பல் இதுவாகும்.

கடந்த 2016 ஆம் ஆண்டில் 57 வெளிநாட்டுப் போர்க் கப்பல்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனிக்கான தூதுவராகிறார் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி!



கொழும்பு, மே 23

ஜேர்மனிக்கான இலங்கையின் புதிய தூதுவராக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி நியமிக்கப் படவுள்ளார்.

ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதுவர் கருணாதிலக அமுனுகம பதவியில் இருந்து ஓய்வுபெறவுள்ள நிலையிலேயே, கருணாசேன ஹெட்டியாராய்ச்சி அந்தப் பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதனை உறுதிப்படுத்தியுள்ள கருணாசேன ஹெட்டியாராச்சி, புதிய பதவியை எப்போது ஏற்றுக் கொள்வது என்று தனக்குத் தெரியாது என்றும், ஜேர்மன் அதிகாரிகளால் தமது நியமனம் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் பதவியேற்பு இடம்பெறலாம் என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை, பாதுகாப்புச் செயலர் பதவியில் இருந்த தாம் நீக்கப்படுவதற்கான காரணம் மர்மமாகவே இருக்கிறது என்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்டது அதற்கான காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாம் எந்தப் பதவியையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருப்பதாகவும் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி கூறியுள்ளார். (க)

# இலங்கையில் தவிக்கும் அகதிகள் மியன்மாருக்கு நாடு கடத்தப்படலாம்!

கொழும்பு, மே 23

காங்கேசன் துறை கடல் பகுதியில் கைது செய்யப்பட்ட மியன்மாரைச் சேர்ந்த 30 ரோஹிங்கியா அகதிகளும் நாடு கடத்தப்படும் அபாயத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக்கு படகில் செல்ல முயற்சித்த போது இலங்கைகடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது பாஸ்போர்ட் சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதியப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

மியன்மாரைச் சேர்ந்த இவர்கள், கடந்த 2013 ஆம் ஆண்டு இந்தியாவில் அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் அதிராம்பட்டினத்தில் தங்கியிருந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி காங்கேசன்துறை கடல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த ரோஹிங்கியா அகதிகள் மீண்டும் மியன்மாருக்கும் நாடு கடத்தப்படக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, இந்த ரோஹிங்கியா அகதிகளுக்கு அகதி அந்தஸ்து வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரகுமான் மற்றும் சட்டத்தரணி சிராஜ் நூர்டின் உள்ளிட்ட மூவர் கொண்ட குழுவினர் கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மே 2 ஆம் திகதி தஞ்சாவூர் அதிராம்பட்டினம் கடலோர காவல் படையினரால் நான்கு இந்தியர்கள் உட்பட 30 மியன்மார் ரோஹிங்கியா அகதிகள் மீதும் வெளிநாட்டினர் மற்றும் பாஸ்போர்ட் சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

நிலையான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் பல நாடுகளைச் சேர்ந்த அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கான பயணத்தை தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

ஆனால், கடல் வழியாக வரக்கூடிய அகதிகளை ஆஸ்திரேலிய அரசு திருப்பி அனுப்பி வருவதுடன், தடுப்பு முகாமில் உள்ள அகதிகளையும் பல்வேறு வழிகள் மூலம் வெளியேற்ற முயற்சி செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க)

# விக்னேஸ்வரனின் தாளத்துக்கு ஆடமுடியாது!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



கொழும்பு, மே 23

வடக்கு மாகாண முதல் அமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தாளத்துக்கு அரசு ஆடமுடியாதுஎன்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இருந்து படையினரை வெளியேற்றும் வகையில் முயற்சியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

அவர் அரசிடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார். ஆனால், அவரது அழுத்தங்களுக்கு நாம் பணிய மாட்டோம்.

ஒவ்வொருவரதும் போடுகின்ற தாளத்துக்கு அரசால் ஆட முடியாது. வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் விலக்கிக் கொள்ளப்பட மாட்டார்கள்.

பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை ஊடகங்கள் தான் வேறு விதமான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றன.

ஆனால், இதேபோன்ற துப்பாக்கிச் சூடுகள் பிலியந்தலவில், களுத்துறை யிலும் இடம் பெற்றிருக்கின்றன. இது ஒரு வழக்கமான சம்பவம் தான்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம்!



கொழும்பு, மே 23

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது, கட்சியினதும் அரசாங்கத்தினதும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் விரைவில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்டு வரும் சில உறுப்பினர்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# தனியார் வங்கிகளின் வளர்ச்சிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி!

கொழும்பு, மே 23

இலங்கையில் உள்ள தனியார் வங்கிகளுக்கு நிதி உதவி செய்து அவற்றின் மேம்பாட்டை அதிகரிப்பதில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆர்வமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வங்கிகளுக்கு கடன், தேறுமதி பொறுப்புறுதி, கொள்திறன் கட்டட நிர்மாணத் திட்டங்களுக்காக விசேட நிதியை வழங்குவதன் மூலம் கணிசமான வளர்ச்சியைப் பெறக்கூடியதாக இருக்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த கிறிஸ்டீன் ஏ. இங்ஸ்ரோம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஏற்கனவே இலங்கையில் உள்ள இரண்டு தனியார் வங்கிகளுக்கு நிதி வசதி செய்ததன் மூலம் அந்த வங்கிகள் பெரும் நன்மையடைந்துள்ளன.

வங்கிகளுக்கு நிதி உதவி செய்வதற்கு ஏற்ற வகையில் மேலும்.சில தனியார் வங்கிகளுடன் பேச்சுகள் நடைபெறுகின்றன.

இந்தப் பேச்சுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அரசும் பூரண ஆதரவை வழங்கி வருகின்றது.- என்றார். (எ)

# ஜனாதிபதி மைத்திரியின் படத்தை பாடசாலைகளில் காட்சிப்படுத்துங்கள்!

## வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, மே 23

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படங்களை காட்சிப் படுத்துமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் எம்.எல். கம்மன்பில கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புகைப்படத்தை காட்சிப்படுத்தாத பாடசாலைகளில் உடனடியாகக் காட்சிப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவி ஏற்று இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் பாடசாலைகளினுள் ஜனாதிபதியின் புகைப்படங்கள் காட்சி படுத்தாமல் உள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தால் 2017 -04-06 என்ற திகதியன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட உதவிச் செயலாளர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்த அந்தக் கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. வலயக் கல்வி அலுவலகங்களுக்குச் சொந்தமான பாடசாலைகளில் இதுவரையில் ஜனாதிபதியின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை என்றால், தேவையான புகைப்படங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.-என்றுள்ளது. (எ)

# தினசரி ராசி பலன் 23.05.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் வைகாசித் திங்கள் 9 ஆம் நாள் துவாதசித்திதி பகல் 12.03 மணி வரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம் ரேவதி காலை 8.24 மணி வரை. பின்னர் பகல் 10.22 மணி முதல் 11.52 மணி வரை. இன்று பிரதோஷ விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: வைகாசி மாத தேய்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: அசுவினி.**

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** யோசனையான நாள். தனவரவு குறையும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தோன்றும். உத்தியோகத்தில் வேலைச்சுமை கூடும்.

**ரிஷபம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக அமையும். செய்தொழில் வியாபாரம் என்பன அபரிமிதமான வளர்ச்சியடையும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். வீடுவாங்கும் முயற்சியில் கடன் உண்டாகும். மாணவர்கள் கடின ஊக்கம் எடுத்தால் நற்பலனைப் பெறுவார்கள்.

**கடகம் :** இன்பமான நாள். தனவரவு அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு நல்ல வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பாராதபடி உயர்வுகள், நன்மைகள் கிடைக்கும்.

**சிம்மம் :** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். தொழிலில் பிரயாசை கூடும். திருமண காரியங்கள் தடைப்பட்டுப் போகும்.

**கன்னி:** சமபலன்கள் காணப்படுகின்றன. வர்த்தகம் ஏறு இறங்குமுகமாக நடக்கும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும். யாருக்கும் பணம் கொடுப்பதோ, வாங்குவதோ கூடாது.

**துலாம்:** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் புதிய நுணுக்க முறையால் வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவில் பாசமும், நேசமும் கலந்திருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றமும் வருமானமும் அதிகரிக்கும்.

**தனுசு:** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். வருமானம் குறையும். உத்தியோகத்தில் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். கவனம் தேவை.

**மகரம்:** மத்திய பலன்கள் காணப்படுகின்றன. தொழில் வியாபாரத்தில் போட்டி, பொறாமைகள் உண்டாகும். அனைவருடனும் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும்.

**கும்பம்:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். சுயதொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**மீனம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகன வசதி பெருகும். மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு அரச உதவிப் பணம் கிடைக்கும்.

**சந்திராட்டம நாள்: சித்திரை 3,4 ஆம் சுவாதி, விசாகம். அனுஷம் கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் உதித்தோர் இந்நாளில் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்.**

# தேர்தல் நடத்தும் முடிவை எடுக்கும் அதிகாரம் இல்லை

## ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, மே 23

தேர்தலை நடத்தும் முடிவை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இலங்கையின் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் யாருக்கும் இல்லை.

அத்துடன், தேர்தலைத் தீர்மானிப்பதற்கான அதிகாரம் உலகில் எந்த ஒரு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இல்லை. - என்றார். (எ)

# திங்களன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 23

வண்ணை, கில்னர் ஒழுங்கை வீர மஹாமாரி அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 7 மணிவரையுள்ள இடப லக்ன சுப முகூர்த்தத்தில் நடைபெறும்.

28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அடியார்கள் பால்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (இ)

# உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் 'கொழும்பு பிரகடனம்' சமர்ப்பிக்கப்படும்



உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் 'கொழும்பு பிரகடனம்' ஜெனீவாவில் சமர்ப்பிக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள, உலக சுகாதார அமைப்பின் 70 ஆவது மாநாட்டில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கலந்து கொள்ளவுள்ளார். இந்தநிலையில், பொது நலவாய ஒன்றிய சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் பிரகடனப்படுத்தப் பட்ட 'கொழும்பு பிரகடனம்' ஜெனீவாவில் இன்று இடம் பெறவுள்ள உலக சுகாதார அமைப்பு மாநாட்டில் சமர்ப் பிக்கப்படவுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் 70 ஆவது மாநாட்டில் கலந்து கொள்ளும் சுகாதார அமைச்சர் விசேட உரை ஒன்றையும் ஆற்ற உள்ளார்.

இதேவேளை, பொது நலவாய ஒன்றிய நாடுகளின் சுகாதார அமைச்சர்களுக்கான கூட்டத்திலும் அமைச்சர் ராஜித சேனாரத்ன உரையாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைட்டத்துக்கு புதிய மாணவரை இணைக்கும் நடவடிக்கை நிறுத்தம்

மாலபே 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரிக்கு புதிதாக மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் தலைவர் டொக்டர் நெவில் பெர்னாண்டோ கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சும் தமக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மாலபே தனியார் கல்லூரிக்கு எதிரான மருத்துவர்கள் அடுத்து என்ன செய்வார்கள் என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாலபே தனியார் வைத்தியசாலையை அரசிடம் ஒப்படைக்கும் நோக்கில் அதன் ஆளணி வளம் ஏனைய சொத்துக்கள் தொடர்பில் அண்மையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# ஏழாலையில் குருதிக்கொடை



ஏழாலைஜந்து நட்சத்திரவிளையாட்டுக்கழகத்தினரும், இளைஞர் கழகத்தினரும் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினரின் அனுசரணையில் இரத்த தான முகாமை நடத்தி இருந்தனர்.

இந்த இரத்த தான முகாம் நேற்று முன்தினம் யாழ். ஏழாலை நட்சத்திரத் திண்ணைப் பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் க.அபராசுதன் தலைமையில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 01 மணி வரை நடைபெற்ற இரத்த முகாமில் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கியுள்ளனர். (ச)

காலைக்கதிர்



# அரசின் அசமந்தம்: விபரீதங்கள் ஏற்பட வழி வகுக்கும்!

ஆங்கிலத்தில் - KRISHAN FRANCIS
வழிமூலம் - ASSOCIATED PRESS
*மொழியாக்கம் - நித்தியபாரதி*



சிறிலங்காவில் நடந்து முடிந்த குருதி தோய்ந்த உள்நாட்டு யுத்தத்தின் எட்டாவது ஆண்டு கடந்த வெள்ளியன்று நிறைவடைந்தது. இந்த யுத்தத்தின் போது காணாமற்போன உறவுகளை இவர்களின் குடும்பத்தவர்கள் தேடிக்கொண்டிருக்கும் அதேவேளையில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தமது நிலங்களை விடுவிக்குமாறும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுமட்டுமல்லாது, சிறிலங்கா கடற்படையினரால் மீனவர்கள் கடலுக்குச் செல்வது தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் இந்தத் தடையை நீக்குமாறு கோரியும் தமிழ் மீனவர்கள் போராட்டம் நடத்துகின்றனர். போரின் போது தமது கணவரை இழந்த பெண்கள் தமது குடும்பங்களைப் பராமரிப்பதிலும் ஊனமுற்றோர் எவ்வித தொழிலுமின்றியும் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்கள் நிச்சயமற்ற உணர்வுடன் வாழ்வதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

போரின் போது இறந்த சிறிலங்கா இராணுவத்தினரின் குடும்பத்தவர்கள் கடந்த வெள்ளியன்று கொழும்பிலுள்ள யுத்த நினைவாலயத்தில் தமது வணக்கத்தைச் செலுத்தினர். இந்த நிகழ்விற்கு சிறிலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வருகை தந்திருந்தார்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற - முன்னாள் போர் வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நினை வாலயத்திற்கு அருகில் தமிழ் மக்கள் நினைவு வணக்கம் செலுத்தினர். இதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கின் பல இடங்களிலும் போரின் போது இறந்தவர்களை நினைவு கூர்ந்து வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாவிட்டாலும் கூட, வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கிலுள்ள தமிழ் மக்கள் முறையிட்டுள்ளனர். ஆனால், தொடர்ந்தும் இராணுவத்தினரின் பலத்தை அதிகரிக்கவுள்ளதாக வெள்ளியன்று வணக்க நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

''தேசிய பாதுகாப்பு மீது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது. எமது முப்படைகளையும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எப்போதும் எடுப்போம். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்'' என அதிபர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

### அரசு மீது மக்கள் கோபாவேசம்

போரை வென்றெடுத்த அதிகாரம் மிக்க அதிபர் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து 2015 தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிறிசேன மீது மக்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். 'மஹிந்த ராஜபக்ஷ மீது மக்கள் கொண்டிருந்த கோபத்தை விட தற்போதைய அரசாங்கத்தின் மீதே மக்கள் அதிக கோபம் கொண்டுள்ளனர். ஏனெனில், ராஜபக்ஷ தமக்காக எந்தவொரு நல்லதையும் செய்வார் என மக்கள் எதிர்பார்க்கவில்லை' என வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகப் பணியாற்றும் ரி.பரந்தாமன் தெரிவித்தார்.

'சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தமக்காக எதையும் தரப்போவதில்லை என்று தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கைகள் காணப்படுகின்றன' என பரந்தாமன் தெரிவித்தார்.

போரின் போது காணாமற்போன பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாகத் தாம் கண்டறிந்து கூறுவதாக தற்போதைய அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அவற்றை இன்னமும் நிறைவேற்றவில்லை. போரின் இறுதிநாள்களில் தம்மிடம் ஒப்படைக்குமாறு சிறிலங்கா இராணுவத்தினர் கூறியமையாலேயே தாம் தமது உறவுகளை அவர்களிடம் ஒப்படைத்தோம் என காணாமற்போனோரின் உறவினர் கூறுகின்றனர்.

> *பிராந்திய சுயாட்சியை வழங்குவதில் அரசாங்கம் தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிப்பது நாட்டில் அமைதியின்மை ஏற்படவும் மோதல்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.*

### நீதிப் பொறிமுறை இதுவரை இல்லை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கள் பேரவையில் சிறிலங்கா அரசாங்கம் பல் வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அரசாங்கத்தாலும் புலிகள் அமைப்பாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்வதற்கான நீதிப் பொறிமுறை இதுவரையிலும் அமைக்கப்பட வில்லை.

புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்கின்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எவ்வித குற்றங்களுமின்றி சந்தேகத்தின் பேரில் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங் கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதும் நடைமுறை யிலுள்ளது. இந்த நாட்டை தமிழ்ப் புலி களிடமிருந்து பாதுகாத்த சிறி லங்கா இராணுவத்தினருக்குத் தண்டனை வழங்குவதற்கு தான் ஒருபோதும் அனுமதியேன் என அடிக்கடி சிறிசேன தெரிவித்து வருகிறார்.

போரின் போது பொதுமக்கள் மற்றும் வைத்தியசாலைகள் மீது கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை மற்றும் போர் வலயத்திற்குள் அகப்பட்டுத் தவித்த பல ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்து போன்றவற்றை வழங்காது தடுத்து வைத்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. போரின் இறுதிக் கட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஐ.நா உறுதிப்படுத்தியது.

இதேபோன்று சிறுவர்களை போரில் ஈடுபடுத்தியமை, மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி யமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் புலிகள் அமைப்பிற்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

### அமைதியின்மை ஏற்பட அதிக வாய்ப்பு

போரின் போது பல்வேறு மீறல்களில் ஈடுபட்ட சிறிலங்காஇராணுவத்தினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது தொடர்ந்தும் இவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது தேசிய பாதுகாப்பு மிக்க நாடாக சிறிலங்காவை மாற் றுவதற்கான எவ்வித முயற்சியையும் அரசாங் கம் முன்னெடுக்கவில்லை என அனைத்துலக நெருக்கடிகள் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளமை மற்றும் போர் மீறல்கள் தொடர்பாக எவ்வித விசார ணையும் முன்னெடுக்கப்படாமை போன்றன பல தமிழ் மக்களின் தேசிய உணர்வுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் குழப்பங்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்திய சுயாட்சியை வழங்குவதில் அர சாங்கம் தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிப்பது நாட்டில் அமைதியின்மை ஏற்படவும் மோதல்கள் ஏற்படவும் வழிவகுக்கும் எனவும் அனைத்துலக நெருக்கடிகள் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

# பச்சிலைப்பள்ளியில் நடைபெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவை







பளை, மே 23

*கிளிநொச்சி* - பச்சிளைப்பள்ளி பிரதேச மக்களுக்கான ஜனாதிபதி நடமாடும் சேவை பளை மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நடமாடும் சேவையை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவையில் இரு தம்பதியினருக்கு பிந்திய திருமண பதிவு இடம்பெற்றதோடு, அவர்களுக்கான சாட்சிப் பத்திரத்தில் அமைச்சர் வஜிர அபேவர்தனவும், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் கையொப்பமிட்டனர்.

இதேவேளை, அந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கான அரச ஆவணங்களை பெற்றுக்கொள்ளல், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுக்கான நடமாடும் சேவையும் நடைபெற்றது. (எ)




பொன்.வேணு கிருஷ்ணா

**மக்கள் வெளியேறத் தடை: வட கொரியா - மலேசியா போட்டிக்குப் போட்டி**

முசுடானின் கீழ் வரம்பு ஏவுகணை நோடோங்-பி அல்லது தி டெபோடோங்-எக்ஸ் என்று அறியப்படுகிறது. தென் கொரியா மற்றும் ஜப்பானின் மொத்த பகுதியைத் தாக்கும் திறன் படைத்தது இது.

இதன் உயர் வரம்பு ஏவுகணை குவாமில் உள்ள அமெரிக்க தளத்தைக் குறிவைக்கும் திறன் படைத்தது. அதன் ஏற்றிச்செல்லும் எடைத்திறன் இன்னும் தெரியவில்லை. ஆனால், 1 முதல் 1.23 டன்கள் வரையிலான எடையைச் சுமந்து செல்லும் திறன் படைத்தது என்று கணிக்கப்பட்டுள்ளது.

**பல்லடுக்கு ஏவுகணைகள்**

டேபோடோங்-1 என்ற ஏவுகணை வடகொரியாவில் பேக்டுசான்-1 என்று அறியப்படுகிறது. நாட்டின் முதல் பல்லடுக்கு ஏவுகணை இது. 1998 ஆம் ஆண்டு இது பரிசோதிக்கப்பட்டது.

சுதந்திரமான சிந்தனை அமைப்பான எஃப் ஏ எஸ் எனப்படும் அமெரிக்க விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு, முதல் நிலை நோடோங் ஏவுகணை என்றும், இரண்டாம் நிலை ஹுவாசாங் 6 என்றும் நம்பப்படுகிறது.

அதனைத்தொடர்ந்து, டேபோடோங்-2 அல்லது பேக்டுசாங்-2 என்ற இரண்டிலிருந்து மூன்று நிலை பேலிஸ்டிக் ஏவுகணை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த பத்தாண்டுகளில் இது விமானம் கொண்டு பரிசோதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**நான்கு புதிய ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது வட கொரியா**

இதன் தாக்கும் தூரம் சுமார் 5000 மற்றும் 15,000 கி.மீ இடையே எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால், அணு ஆய்வுகளுக்கான மையம் இதன் தாக்கும் தூரத்தை 6,000 கி.மீட்டராகக் கணித்துள்ளது.

டேபோடாங்-2 வெற்றிகரமாக ஏவப்பட்டால் மற்றும் அதன் உச்சபட்ச தாக்கும் தூரத்தை எட்டினால் அதன் அதிகரித்த சக்தி ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் சில பகுதிகள் மற்றும் இதர நாடுகள் அதன் தாக்கும் எல்லைக்குள் வந்துவிடும்.

**கண்டம்விட்டுக்கண்டம்பாயும் ஏவுகணைகள்**

மிக நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணையை வட கொரியா மேம்படுத்தி வருவதாக நம்பப்படுகிறது.

சாலையில் நகர்ந்தபடியே செல்லும் திறன் படைத்த இந்த ஏவுகணைக்கு பார்வையாளர்கள் கெ.என்- 08 அல்லது ஹுவாசாங்-13 என்று பெயரிட்டுள்ளனர்.

வடகொரியாவிடம் குறைந்தது ஆறு கே.என் - 08 ஏவுகணைகள் இருக்கின்றன என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் நம்புகிறது. அமெரிக்காவின் பெரும் பகுதியைச் சென்று சேரும் திறன் படைத்தது.

கெ.என் - 14 என்ற மேம்பட்ட ஏவுகணையை வடகொரியா தயாரித்துள்ளதாக நம்பப்படுகிறது. ஆனால், இது வரை இந்த ஏவுகணைகள் பொதுவெளியில் சோதிக்கப்படவில்லை.

ஆனால், கடந்த ஜனவரி மாதம் அண்மையில் நிகழ்ந்த பரிசோதனை குறித்த அறிகுறிகள் தென்பட்ட நிலையில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் மேம்படுத்தும் முயற்சியில் கடைசி நிலையில் வட கொரியா இருப்பதாகத் தலைவர் கிம் ஜோங் உன் அறிவித்தார்.

**ட்ரம்ப் அதிபரான பிறகு வட கொரியா நடத்திய ஏவுகணை சோதனை**

தற்போது அதனையும், வட கொரியாவிடம் சிறிதாக்கப்பட்ட அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகள் உள்ளன என்று முன்னர் கூறியதையும் வைத்துப் பார்க்கும் போது, நீண்ட தூரம் செல்லும் அணு ஆயுத ஏவுகணை தயாரிப்பில் வட கொரியா நெருங்கிவிட்டதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தியுள்ளது.


போர் கப்பலான கார்ல் வின்சன்

எனினும், இதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்று வல்லுநர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

**''அமெரிக்க போர் கப்பலை வட கொரியா மூழ்கடிக்கும்''**

கொரிய தீபகற்பத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் அமெரிக்க விமானம் தாங்கி போர் கப்பலை ''மூழ்கடிக்க'' வட கொரியா தயாராக இருப்பதாக அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் போர் கப்பலான கார்ல் வின்சனை ''ஒரே ஓர் அடியில் மூழ்கடித்துவிட முடியும்'' என்ற எச்சரிக்கை நோடாங் ஷின்முன் செய்தித்தாளில் வெளியாகியுள்ளது

வின்சன் கப்பலை முதன்மையாக கொண்டு சண்டைக்குத் தயாராக இருக்கும் அமெரிக்க இராணுவ படை, இந்த வாரத்தில் தீபகற்பத்தைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

வட கொரியாவின் அணு சோதனைகள் குறித்து அமெரிக்கா காத்துவந்த


அதிகாரிகளுடன் வடகொரியாவின் தலைவர்

''மூலோபாய அமைதி'' முடிவடைந்து விட்டது என்ற அமெரிக்காவின் எச்சரிக்கைக்கு மத்தியில் அதிபர் டொனால்ட் ட்ரம்பால் அந்த போர்க்கப்பல் அனுப்பப்பட்டது. வட கொரியாவின் தோல்வியடைந்த ஏவுகணை சோதனை மற்றும் சமீபத்திய ஆயுதங்களை வெளிக்காட்டிய, பிரமிக்க வைக்கும் இராணுவ அணி வகுப்பு ஆகியவற்றிற்குப் பிறகு பதற்றங்கள் அதிகரித்தன.

ஆளுங்கட்சியான தொழிலாளர் கட்சியின் செய்தித்தாளான நோடாங் ஷின்முனில் ஞாயிறன்று வெளிவந்த இந்த செய்திக்குப் பிறகு, கிம் ஜாங் உன், பன்றி பண்ணையை பார்வையிடுவது குறித்த விரிவான செய்தியும் வெளிவந்தது.

''எங்களின் புரட்சிப் படைகள் அமெரிக்க அணு சக்தி விமானம் தாங்கியை ஒரே அடியில் வீழ்த்தத் தயாராக உள்ளன என்றும், ''பெரிய விலங்கு'' என்று வட கொரியாவால் கருதப்படும் அதனை அழிப்பது தங்களின் இராணுவப் படையின் வலிமையை காட்டுவதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையும்'', என்று அப்பத்திரிகை கூறியது

இதே எச்சரிக்கையை மாநில செய்தித்தாளான 'மிஞ்சு ஜோசன்' பத்திரிகையும் எதிரொலித்துள்ளது.

''எதிரிகள் திரும்ப எழ முடியாத அளவு இராணுவம் இரக்கமற்ற அடியை கொடுக்கும்'' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வட கொரியா மீதான தடைகளை இறுக்க அமெரிக்கா திட்டம்**

இந்த வெளியார் இணைப்புகளை தனிப்பக்கங்களாகத் திறக்கும் வட கொரியா மேற்கொண்டு வரும் அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் அதற்கு அழுத்தம் தர ராஜ்ஜிய ரீதியான நடவடிக்கைகளை எடுக்கவும், தடைகளை மேலும் இறுக்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

செனட் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட ஒரு சிறப்புக்கூட்டத்துக்குப் பின், வட கொரியாவுக்கு எதிரான அதிபர் டொனால்ட் ட்ரம்பின் வியூகம் அறிவிக்கப்பட்டது.


முன்னர், பசிஃபிக் பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத்தை சேர்ந்த மூத்த தளபதி, தென் கொரியாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பட்ட ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு முறையை நியாயப்படுத்திப் பேசியிருந்தார்.

வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன்னை மண்டியிட வைக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்பவில்லை என்றும், மாறாக அவரை நிதானத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்றே விரும்புவதாகவும் ஆயுத சேவைகள் குழுவிடம் பசிஃபிக் பிராந்திய கட்டுப்பாட்டு தலைவர் ஹாரி ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் யாங் யீ, அமெரிக்கா - தென்கொரியா இடையேயான போர் விளையாட்டுகளை முடிவுக்குக் கொண்டு வரவும், அந்தப் பகுதியில் பதற்றத்தை குறைக்க வட கொரியாவின் அணு மேம்பாட்டுத் திட்டத்தை நிறுத்தக் கோரியும் வலியுறுத்தியுள்ளார்.

(கேள்வி தொடரும்...)





ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




154



# தமிழ்த் தேசிய எழுச்சி

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### உதவி வழங்கும் நாடுகளின் ஒஸ்லோ மாநாடு

சமாதான முயற்சிக்கு உலக ஆதரவைப் பெறவும், சர்வதேச சமூகத்திடம் இருந்து அவசர நிதி உதவி திரட்டும் நோக்கத்துடன், உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஒன்றை நோர்வே அரசு கூட்டியது. இந்த மாநாடு 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாளன்று ஒஸ்லோவில் உள்ள ஹால் மன்கோமன் பார்க் விடுதியில் இடம் பெற்றது. ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசியா– பசுபிக் பிராந்தியங்களைச் சேர்ந்த 37 நாடுகளில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசிய பீற்றர்சன், இலங்கைத் தீவில் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டுமாயின், அந்த முயற்சிக்கு வெகுசன ஆதரவு இருக்க வேண்டியது அவசியம். – என்றார். ''சமாதானத்தின் பெறுபேறுகளை சாதாரண மக்கள் தமது நாளாந்த வாழ்வில் அனுபவிக்க வேண்டும். இதற்குச் சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம். அல்லாது போனால் இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் இழந்துபோக நேரிடும்''. – என்றார் பீட்டர்சன்.

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது உரையில், யுத்தத்தால் சிதைந்துபோன பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில், உருப்படியான முறையில் உலகத்தின் ஆதரவு எமக்கிருந்தால் இலங்கையில் ஒரு நிரந்தரமான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும். – என்றார்.

அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் ஆர்மிரேச், இந்த வைபவத்தில் உரையாற்றும் போது, சமாதானத்தையும் நல்லாட்சியையும் மேம்பாடு செய்யும் திட்டங்களுக்குத் தனது நாட்டின் ஆதரவு எப்பொழுதும் உண்டு. – என உறுதியளித் தார்.



ஆர்மிரேச் தொடர்ந்து பேசும் போது, 'வன்முறையும் பிரிவினையும்' கைவிட வேண்டும் என விடுதலைப் புலிகளின் இயக்கத் துக்குக் கோரிக்கை விடுத்தார். ''அமைதி வழியில் இனநெருக்கடிக்குத் தீர்வுகாண இணக்கம் தெரிவித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் ரீதியில் உறுதி பூண்டிருப்பது அமெரிக்காவுக்கு நம்பிக்கையைத் தருகிறது. இந்த உறுதிப்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இன்னுமொரு படிமேல் சென்று, பயங்கரவாதத்தையும் வன்முறையும் கைவிடுவதாக ஒரு பகிரங்கப் பிரகடனத்தைச் செய்யுமாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தை நாம் வேண்டிக்கொள்கிறோம். ஒரு தனி அரசை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளதாக சிறிலங்கா மக்களுக்கும் சர்வதேசச் சமூகத்துக்கும் விடுதலைப் புலிகள் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும் என்றார் ஆர்மிரேச்.

இன நெருக்கடிக்குள் சிக்குண்டு நிற்கும் இரு தரப்பினரையும் சமாதான வழியைத் தழுவுமாறு ஊக்குவிப்பதற்கு கூட்டப்பட்ட ஒரு சர்வதேச அரங்கில் தமிழரின் சுதந்திரப் போராட்டத்துக்கு இகழ்ச்சியை உண்டு பண்ணும் நோக்கத்துடன் உயர்தர அமெரிக்க அரச அதிகாரி ஆத்திரமூட்டும் வகையில் எமது இயக்கத்தைச் சீண்டியமை எனக்குச் சினத்தைக் கொடுத்தது.

ஆயுதப் போராட்டம் பற்றிய அமெரிக்காவின் பார்வை மிகவும் குறுகியது; மேலோட்டமானது என்பது எனக்கு நன்கு தெரியும். அரசியல் வன்முறை பற்றி ஒரு தெளிவற்ற குளறுபடியான கோட்பாட்டைக் கொண்டுள்ள அமெரிக்க வல்லரசு உலகெங்கும் தலைவிரித்தாடும் வன்முறை வடிவமான போராட்டங்கள் எல்லாவற்றையுமே பயங்கரவாத பூதமாகக் காண்கிறது. அடக்குமுறைக்கும் அரச பயங்கரவாதத்துக்கும் எதிராக நிகழ்த்தப்படும் சில போராட்டங்களின் தார்மீக, அடிப்படை, அரசியல் புறநிலை, வரலாற்றுச் சூழ்நிலை ஆகிய முக்கிய அம்சங்கள் இந்தக் குறுகிய பார்வைக்குள் அடங்குவதில்லை. எனினும், இந்தச் சர்வதேச அரங்கில் ஒரு சர்ச்சையைக் கிளப்பிவிட நான் விரும்பவில்லை. எனது உரையின்போது, பண்பான மொழியில் நாகரிகமான முறையில் எமது மக்களின் போராட்ட தர்மத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறி அவருக்குப் பதிலளிப்பதென முடிவெடுத்தேன்.



தேநீர் விருந்துபசாரத்தின் பின்னர் ஜப்பான் அரச பிரதிநிதி யசூசி அகாஸி, ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி பீட்டர் ஹான்சன், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் சிறீமதி மார்க்கொட் வால்ஸ்ரோம், சர்வதேச அபிவிருத்திக்கான பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் கிளையர் சோட் ஆகியோர் உரை நிகழ்த்தினர். எல்லோருமே சமாதான முயற்சிக்குத் தமது முழு ஆதரவைத் தெரிவித்தனர். இதனையடுத்து நான் உரையாற்றினேன். எனது உரையின் முக்கிய பகுதிகளை மட்டுமே இங்கு தருகிறேன்:-

*''இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சார்பாக இம் முக்கிய மாநாட்டில் உரை நிகழ்த்த நான் அழைக்கப்பட்டமை எனக்குக் கிடைத்த கௌரவமாக நான் கருதுகிறேன். இந்த மாநாட்டைக் கூட்டிய வமைக்காக, நோர்வே அரசுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளை உதவி வழங்கும் உலக நாடுகளுக்கு எடுத்து விளக்க, இன நெருக்கடியுடன் சம்பந்தப்பட்ட இரு சாராருக்கும் இந்த மாநாடு ஒரு சிறந்த அரங்கமாக அமைந்துள்ளது.*

*தென்னாசியாவில் சமாதானமும், அரசியல் உறுதிநிலையும், வளமான வாழ்வும் நிலவவேண்டும் என அக்கறை கொண்டுள்ள நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை பற்றியும் அங்கு தற்பொழுது நிலவும் யதார்த்த மெய்நிலை பற்றியும் அறிந்துகொள்ள ஆவலாக இருப்பீர்கள்.*

*இரண்டு தசாப்தங்களாக இலங்கைத் தீவைப் பாழ்படுத்திய இன யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதும் களத்தில் ஒரு நிலையான சமாதானச் சூழ்நிலை நிலைநாட்டப்பட்டதுமே இந்த அமைதி முயற்சியால் பெறப்பட்ட மகத்தான சாதனை ஆகும். போர் நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளப்பட்டதன் காரணமாக நெருக்கடியுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே வன்முறையை நிறுத்திக்கொண்டனர். துப்பாக்கிகள் இப்போது மௌனமாகி உள்ளன. போர் நிறுத்த உடன்பாடு சர்வதேச கண்காணிப்பு முறைமையால் மேற்பார்வை செய்யப்படுவதால் பெரிய அளவிலான யுத்தமீறல்கள் எதுவும் இன்றி ஒன்பது மாதங்களுக்கு மேலாக நிலைத்து நீடிக்கிறது. மிகவும் இறுக்கமான இராணுவ ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட நெருக்கடி நிலையை படிப்படியாகத் தணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மிகவும் கொடூரமான யுத்தத்துக்கு முகம் கொடுத்து வடக்கு, கிழக்கு மாநிலத்தில் மெல்ல மெல்ல இயல்பு நிலை திரும்பி வரத் தொடங்கியுள்ளது.*


*சமாதானத்தைப் பலப்படுத்திக், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் தெளிவான தரிசனத்துடன் சமாதானப் பேச்சுகள் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில், தாம் எதிர்கொள்ளும் அவசர வாழ் நிலைத் தேவைகளுக்குக் காலதாமதமின்றி உடனடியாகப் பரிகாரம் கிட்டும் என போரால் அவல வாழ்வைத் தழுவிநிற்கும் எமது மக்கள் மத்தியில் எதிர்ப்பும் நம்பிக்கையும் வளர்ந்து வருகிறது. காலம் கடத்தாது உடனடியாக, பணமாகவும் பொருளாகவும் துயருற்று நிற்கும் எமது மக்களுக்கு உருப்படியான உதவிகள் கிடைக்காது போனால் இந்தச் சமாதான முயற்சியிலும் பேச்சுகளிலும் அவர்கள் எவ்வித அர்த்தத்தையும் கண்டுகொள்ளப் போவதில்லை. தமிழர் தாயகத்தைச் சீரழித்துச் சிதைத்து விட்ட இந்தக் கோரமான கொடூர யுத்தம் பெரும் இடர்பாடுகளையும் பெரிய மானிதாபிமானப் பிரச்சினைகளையும் உருவாக்கியது. எமது மக்களின் இந்தத் துன்ப துயரங்களுக்குப் பரிகாரம் காணாது அவர்களது மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்யாது போனால் சமாதான முயற்சியில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் எதிர்ப்பும் பாரதூரமாகப் பாதிக்கப்படும்.*

(தொடரும்...)



# பேர்ளினில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாள் நிகழ்வுகள்

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளையும், இறுதிக்கணம் வரை தமது மண்ணுக்காய் தமது உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களையும் நினைவுகூரும் வகையிலும், தமிழின அழிப்புக்குப் பன்னாட்டு ரீதியாக நீதிகோரும் வகையிலும் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் கவனவீர்ப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.




நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள், படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலர்வணக்கம், சுடர்வணக்கம் செலுத்தியுள்ளனர்.

தமிழின அழிப்பை பல்லினமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பெரிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் துண்டுப் பிரசுரங்களையும் அவர்கள் விநியோகித்து ஒலிபெருக்கியிலும் வாசித்தனர்.

'தமிழீழ விடுதலையை வென்றெடுக்கும் வரை ஓயாது, உறுதி குலையாது தொடர்ந்து போராடுவோம்' என உறுதி மொழியுடன் கவனவீர்ப்பு நிகழ்வு நிறைவுபெற்றது. (எ)


# நெதர்லாந்தில் நடைபெற்ற இன அழிப்பு நினைவு நாள் நிகழ்வுகள்



இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் இனப்படுகொலைசெய்யப்பட்ட உறவுகளுக்கான வணக்க நிகழ்வு கடந்த மே மாதம் 18 ஆம் நாள் நெதர்லாந்து டென்ஹாக் ஐ.சி.சி. முன்றிலில் நெதர்லாந்து வாழ் தமிழீழ மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

நெதர்லாந்து தமிழர் பேரவையால் நடத்தப்பட்ட கவனவீர்ப்பு நிகழ்வு, பொதுச் சுடரேற்றலுடன், ஈகச்சுடரேற்றல் அகவணக்கத்துடன் சுடர், மலர் வணக்கம் என்பன செலுத்தப்பட்டன.

தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்று, இனப்படுகொலை தொடர்பான துண்டுப் பிரசுரங்களை நெதர்லாந்து மக்களுக்கு விநியோகித்தபடியும் எமக்கான நீதி மறுக்கப்பட்டிருப்பதும் அங்கு எடுத்துரைக்கப்பட்டது. (எ)




# ஆஸி.மெல்போர்ணில் தமிழர் இன அழிப்பு நினைவு நாள் நினைவேந்தல்









2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளி வாய்க்காலில் இறுதி யுத்த நாள்களில் இலங்கை இராணுவத்தால் தமிழ்மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்புப் போரின்போது காவு கொள்ளப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் 8 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண்நகரில் கங்கேரியன் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 18ஆம்திகதிவியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு மண்டப நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இனப்படுகொலைசெய்யப்பட்ட தமிழ்மக்களின் நினைவாக முதன்மைச்சுடர் ஏற்றப்பட்டது. இந்த முதன்மைச் சுடரை முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போது அதில் சிக்குண்டு மீண்டு வந்தவர்களில் ஒருவரான தர்மசீலன் ஏற்றிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தில் பலியாகிய பொதுமக்களின் நினைவாக திருவுருவப் படத்துக்கு முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை இழந்த கரிதாஸ் ஈகச் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து பொதுமக்களும் உணர்வுபூர்வமாக மலர்வணக்கம் செலுத்தினார்கள்.

அடுத்து தாயக விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் அரச படையினரால் படுகொலைசெய்யப்பட்ட பொதுமக்களையும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் மனிதப்பேரவலத்தில் பலியாகிய பொதுமக்களையும் உள்ளத்தில் நினைந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மலர் வணக்கத்தையடுத்து அரங்க நிகழ்வுகளாக நினைவுரையை முள்ளிவாய்க்காலில் யுத்தத்தின் இறுதிநாள்கள் வரை மருத்துவப் பணிபுரிந்து தற்போது புலம்பெயர்ந்து வாழும் வைத்தியர் வரதராஜாவின் ஒளிப்பதிவு செய்யப்பட்ட உரையின் காணொலிப் பதிவு அகலத் திரையில் திரையிடப்பட்டது.

அடுத்த நிகழ்வாக மலேசியாவை பிறப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவில் தற்காலிகமாக வசித்துவருபவருமான செல்வன் பார்த்தீபனின் நாட்டிய நடனம் இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவுப் பாடல்களையும் தாயகத்து அவலங்களைச் சொல்லும் சில தாயகப் பாடல்களையும் இணைத்துச் செய்யப்பட்ட பாடல் தொகுப்பிற்கு பார்த்தீபன் மிகவும் உணர்வுபூர்வமாக அந்த நாட்டிய நடனத்தை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மக்களின் உணர்வுகளை அவரது அந்த நாட்டியநடனம் தொட்டிருந்தது.

அடுத்து சமூக அறிவித்தல்களின் பின்னர் தேசியக் கொடிகள் இறக்கப்பட்டு உறுதி மொழியுடன் இரவு8.15மணியளவில் 'தமிழர் இனவழிப்பு நினைவேந்தல் நினைவுநாள் - 2017' நிகழ்வுகள் நிறைவு பெற்றன. (எ)

## சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் வர்த்தகம்

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் பெரியளவில் போதைப் பொருள் வர்த்தகம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த கைதி ஒருவர் ஊடகம் ஒன்றுக்கு இது பற்றிய விவரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கூடுதலான வருமானம் கிடைக்கப் பெறுவதாக அந்தக் கைதி தெரி வித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், நீண்ட கால கைதிகள் போன்றோர் அதிநவீனசெல்லிடப்பேசிகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜி.எஸ்.பி.சலுகையின் பலன்களைப் பெற அடிப்படையான நடவடிக்கைகள் அவசியம்

## நன்மைகள் முழுவதும் மீனவருக்கே!

## என்கிறது மீன் ஏற்றுமதியாளர் சங்கம்



கொழும்பு, மே 23

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் மூலமான ஆகக் கூடிய பலன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அரசு அதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுக்க வேண்டும் என்று மீன் உற்பத்தி, ஏற்றுமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கேணல் சன்ன வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வரிச் சலுகை மூலமான நன்மைகள் முழுமையாக மீனவர்களுக்குக் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை காலமும் மீன்களுக்கான விலையை மாலைதீவே தீர்மானித்தது. ஐரோப்பிய நிவாரணச் சலுகையைத் தொடர்ந்து விரைவில் மீன்களுக்கான விலையைத் தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும்.

மீன் வளர்ப்புக்கான புதிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போது மன்னார் பிரதேசத்தில் மூவாயிரம் ஏக்கரில் புதிதாக மீன் வளர்ப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் உள்ளிட்ட பல பிரதேசங்களில் இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் நிலவும் ஆகக்கூடிய கேள்வி இறால் போன்ற மீன் வகைகளுக்கு உண்டு. இதனால், அதனை வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இலங்கையால் எதிர்பார்த்த இலக்கை இத்துறையில் அடைய முடியும்.

மீன் ஏற்றுமதியில் வருடாந்தம் பெறப்பட்ட 200 கோடி 50 லட்சம் ரூபா அமெரிக்க டொலர்களை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையின் மூலம் இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும். இருப்பினும், இந்தத் தொகைக்கு உட்பட்டதாக இன்றி ஏற்றுமதி மூலமான வருமானத்தை நூறு கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே அரசினதும் எமது சங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும்.-என்றார். (எ)

## யாழ்.பிரதேச செயலக கலை, இலக்கியப் போட்டி

### ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், மே 23

கலாசார அலுவல்கள் திணைக்களம் பிரதேச ரீதியில் ஆண்டுதோறும் நடத்திவரும் இலக்கியப் போட்டிகளுக்கு யாழ். பிரதேச செயலகத்தால் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

6 தொடக்கம் 7 வயதினருக்கான பாலர் பிரிவில் கையெழுத்துப் போட்டியும் 8 தொடக்கம் 10 வயதினருக்கான சிறுவர் பிரிவில் கவிதை, கையெழுத்துப் போட்டிகளும் 11 தொடக்கம் 15 வயதினருக்கான கனிஷ்ட பிரிவில் கட்டுரை, கவிதை, கவிதை பாடல் ஆகிய போட்டிகளும் 16 தொடக்கம் 18 வயதினருக்கான சிரேஷ்ட பிரிவில் கட்டுரை, பாடல், நாடகப் பிரதியாக்கல் ஆகிய போட்டிகளும் 18 வயதுக்கு மேல் திறந்த பிரிவில் பாடலாக்கம், நாட்டார் கலை, இலக்கிய விவரணம், சிறு கதை, சிறுவர்கதை ஆகிய போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

விண்ணப்பங்களையும் ஆக்கங்களையும் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னார் யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறும் கவிதை பாடல் போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் பிரதேச செயலர் பொ.தயானந்தன் தெரிவித்துள்ளார். விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் குறுங்காலக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரணதர தகைமை உடையவர்கள் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல், கணினி வலையமைப்புக்கான சான்றிதழ், கணினி வன்பொருள் சான்றிதழ், கணிய அளவை உதவியாளர், அலுவலக நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் பயிற்சி ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

தரம் 10 ஐ பூர்த்தி செய்தவர்கள் வெல்டிங், மோட்டார் சைக்கிள் திருத்துநர் பயிற்சிக் கற்கைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## போதைப்பொருள் சோதனை; பொலிஸாருக்கு விசேட பயிற்சி



கொழும்பு, மே 23

போதைப்பொருள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸாரின் பாதுகாப்புக்காக, அவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் பிலியந்தலை பிரதேசத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதனையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, போதைப் பொருள் தொடர்பில் கிடைக்கும் தகவல் மற்றும் செல்ல வேண்டி பிரதேசம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்த உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

## பிலியந்தலை சூட்டுச் சம்பவம்; மேலும் மூவர் கைதாகினர்

கொழும்பு, மே 23

பிலியந்தலை பிரதேசத்தில் போதைப் பொருள் சுற்றி வளைப்புக்காகச் சென்றிருந்த பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பின் பிரிவின் அதிகாரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் மேலும் 3 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் சிறுமி ஒருவரும் உயிரிழந்தனர்.

மேலும் 2 பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த மூன்று பேரும் குற்றச் செயல் இடம்பெறுவதற்கு உதவி புரிந்தமை, சாட்சிகளை மறைத்தல், போலியான தகவல்களை வெளியிட்டமை மற்றும் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பு அளித்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

44 வயதான பெண் ஒருவரும், 22 வயது மதிக்கத்தக்க இரண்டு பேரும் அகங்கம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

## மாகாண சபை உறுப்பினர்களுக்கு விரைவில் ஒழுக்கக் கோவை!

### அரசு கவனம் செலுத்தி வருகிறது என்கிறார் பைஸர் முஸ்தபா

கொழும்பு, மே 23

மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோவை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அரசு கவனம் செலுத்திவருகின்றது.

இதற்காக அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'இவ்வாறு உருவாக்கப்படவுள்ள ஒழுக்கக் கோவை மூலமாக மாகாண சபை பிரதிநிதிகளின் பொறுப்புகள் மற்றும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற அழுத்தம் கொடுப்பதாக அமையும்.

இதேவேளை, வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. அவற்றுக்கான தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.' -என்றார்.

## பள்ளிவாசல் தாக்குதல்: விசாரணைகள் ஆரம்பம்

குருநாகல், மே 23

குருநாகல் - மல்லவ பிட்டிய முஸ்லிம் பள்ளி வாசலின் மீது, நேற்றுமுன்தினம் அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டுவீச்சு சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று குருநாகல் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெற்றோல் குண்டுகள் நான்கு வீசப்பட்ட போதிலும், ஒன்றே ஒன்று தான் வெடித்துள்ளது. இதனால் பள்ளி வாசலின் சுவருக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பள்ளிவாசலில், சி.சி.டி.வி கமெராக்கள் பொருத் தப்பட்டிருந்த போதிலும், சம்பவம் தொடர்பில் பதிவாகியுள்ள காட்சிகள் தெளிவாக இல்லை.-என்றது.

இதேவேளை ஒரு வருடத்துக்கு முன்னர், இந்தப் பள்ளி வாசலின் உண்டியல் உடைக்கப்பட்டு, அதிலிருந்த பணம் சூறையாடப்பட்டது.


எனினும், அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையிலும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# மெரினாவில் காவல்துறையினரின் தடையை மீறி ஈழப்படுகொலை எட்டாம் ஆண்டு நினைவேந்தல்!

## 300 பேர் கைதாகினர்











சென்னை,மே 23

சென்னை மெரினா கடற்கரையில் காவல் துறையினரின் தடையை மீறி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஈழத்தமிழர் படுகொலையின் 8 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

மே 17 இயக்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வில் பெருந்தொகையானோர் பங்கேற்றனர். இதன்போது நிகழ்வில் பங்கேற்றவர்கள் பாலச்சந்திரனின் உருவப் படங்கள் மற்றும் ஈழப்படுகொலையைக் கண்டிக்கும் விதத்திலான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு கண்ணகி சிலையடியை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். இதனை அடுத்து, கண்ணகி சிலை அருகே காவல் துறையினரின் தடைகளுக்கு மத்தியிலும் மெழுகு வர்த்தி ஏற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். அங்கும் காவல் துறையினர் நுழைந்து அதில் பங்கேற்றவர்களைக் கைது செய்தனர்.

ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்குப் பின்பு மெரினா கடற்கரையில் கூட்டம் நடத்தவோ, நிகழ்ச்சிகள் நடத்தவோ அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், ஈழத்தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி அறிவித்திருந்தார்.

இதனை அடுத்து, மெரினா கடற்கரையில் தடுப்புக் காவல் மையம் அமைக்கப்பட்டு, 200 இற்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணிக்காக குவிக்கப்பட்டனர். கடற்கரை வீதியில் வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது. உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை உள்ள 9 வழித்தடங்களில் வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், மெரினா கடற்கரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உருவப்படம் பதித்த, கறுப்பு சட்டை மற்றும் ரி - சேர்ட்டுகள் அணிந்து வந்த 12பேர்கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து, திருவள்ளுவர் சிலையை நோக்கி மெழுகுவர்த்தி ஏந்தி நினை வேந்தல் நிகழ்வை நடத்த திருமுருகன் காந்தி, இயக்குநர் வ.கவுதமன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன், ஓவியர் வீரசந்தானம் ஆகியோர் பேரணியாக சென்றனர். அவர்களுடன் மே 17 இயக்கத்தைச் சார்ந்த இளைஞர்களும் பேரணியாக சென்றனர்.தடையை மீறி பேரணியாகச் சென்றதாக இவர்கள் அனைவரையும் காவல்துறையினர் கைது செய்தனர். மீண்டும் திருவள்ளுவர் சிலை அருகில் மற்றொரு தொகுதியில் அஞ்சலி நிகழ்வை நடத்த முயன்றனர். இதனால் மெரினாவில் பரபரப்பான நிலைமை காணப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்ற திருமுருகன் காந்தி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் இயக்குநர் வ.கவுதமன் உட்பட மே 17 இயக்கத்தினர், பொதுமக்கள் என சுமார் 300 இற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வாகனங்களில் ஏற்றப்பட்ட பின்னரும்கூட மே 17 இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மைந்தன் பாலச்சந்திரனின் உருவப் படம் மற்றும் ஈழப்படுகொலை தொடர்பான படங்களைக் கைகளில் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களில் திருமுருகன் காந்தி உள்ளிட்ட 17 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

## அ.தி.மு.க. அணிகள் இணைப்பு பிரதமர் மோடியின் கைகளில்!

### கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் தெரிவிப்பு

கோவை,மே 23

அ.தி.மு.க. இரு அணிகளின் இணைப்பு எடப்பாடி மற்றும் பன்னீர் செல்வம் கைகளில் இல்லை. அது பிரதமர் மோடியின் கைகளில்தான் உள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் தெரிவித்தார்.

கோவையில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி அலுவலகத்தின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழக அரசு, மத்திய அரசின் மிரட்டலுக்கு அஞ்சி தமிழகத்தின் உரிமைகளை பறிகொடுத்து வருகிறது. தங்களது பதவிகளை காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.கவினர் மத்திய அரசிடம் தமிழக மக்களின் உரிமைகளைப் பறிகொடுத்துள்ளனர்.

அ.தி.மு.கவை இரண்டு பிரிவாகப் பிரித்து அவர்களை அடிமையாக்கி, ஜனநாயக அத்துமீறலை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழக சட்டசபையை கூட்டி மானிய கோரிக்கை மீதான விவாதம் நடத்த வேண்டும். மாநில அரசின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

மத்திய அரசு வருமான வரித்துறையை ஆயுதமாக கொண்டு அரசியல் கட்சிகளை மிரட்டி வருகிறது.

உள்ளூராட்சி தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அ.தி.மு.க. அஞ்சுகிறது. தமிழகத்தின் 9 ஆவது முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி உள்ளார். இதுவரை தலைமைச் செயலகத்தில் மத்திய அமைச்சர் ஆய்வுக் கூட்டத்தை அவர் நடத்தியதே இல்லை. இது ஜனநாயகத்துக்கு எதிரானது. -என்றார். (ச)

## சசிகலாவை எதிர்ப்பவர்கள் துரோகிகள்! பன்னீர் அணியினர் மீது பாய்ச்சல்

புரட்சித்தலைவி அம்மாவை இழித்தும், பழித்தும் பேசிய அதே தீய சக்திகள், துரோகிகள் இப்போது சசிகலா, டி.டி.வி. தினகரன் மீது எதிரிகள் களங்கம் கற்பிக்க முனைகிறார்கள் என்று நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையில் சசிகலாவுக்கு ஆதரவாக அறிக்கை வெளியாகி உள்ளது.

அ.தி.மு.க. இரு அணிகளின் இணைப்பு முயற்சியின் போது, சசிகலா, டி.டி.வி.தினகரன் மற்றும் அவரது குடும்பத்தை நீக்கி வைத்து விட்டோம் என எடப்பாடி பழனிசாமி அணி கூறியது. என்றாலும், அவரது ஆதரவாளர்கள் சசிகலா, தினகரனுக்கு ஆதரவாகப் பேசிவருகிறார்கள்.சிறைக்கு சென்று அவரை சந்திக்கிறார்கள்.

இந்த நிலையில் அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வ ஏடான நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையில் சசிகலாவுக்கு ஆதரவாக அறிக்கை வெளியாகி உள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை-

கோடான கோடி மக்களின் உள்ளங்களில் குடி கொண்டிருக்கும் கருணையின் பிறப்பிடம், ஈகைக்கு இலக்கணமாகத் திகழும் புரட்சித் தலைவி அம்மா இல்லாத இக்கட்டான இந்த சூழ்நிலையில், எதிரிகளும், பகைவர்களும் பின்னிப் பிணைந்து கொண்டு கழகத்தையும், கழக ஆட்சியையும் அழிக்கப்பார்க்கின்றனர். தரம் தாழ்ந்த வார்த்தைகளால் அம்மாவின் புகழைச்சீர்குலைக்கும்செயலில்ஈடுபடுகின்றமை மனவேதனையை அளிக்கிறது.

எம்.ஜி.ஆர். உருவாக்கி, இதயதெய்வம் அம்மாவால் வளர்க்கப்பட்ட இந்தக் கோட்டையை அசைத்து விடலாம் என்ற நப்பாசையில் ஆட்டம் போடுகிறது ஒரு கூட்டம். ஆனால் அது ஒரு போதும் நடக்காது. பொய்யர்கள் கூட்டம் நாள் தோறும் பொய்களை அடுக்கடுக்காகப் புனைந்து புழுதி வாரி தூற்றினாலும் , சதி வழக்குகளை தொடுத்து சிறைக்கு அனுப்பி வைத்தாலும், எதற்கும் அஞ்சாது, கழகத்தை வழிநடத்தும் வல்லமை பெற்றவர் கழகப் பொதுச் செயலாளர் சசிகலா.

பொதுவாழ்வுக்கு வந்தால் ஏற்படும் தடைகளை அறிந்திடாதவர் அல்லர் சசிகலா. தடைக்கற்களை வெற்றிப் படிக்கட்டுகளாக மாற்றிடும் வல்லமை மிக்கவர், சவால்களை தானே ஏற்று சாதிக்கும் தைரியத்தை தனதாக்கிக் கொண்ட ஜெயலலிதாவின் பாசறையில் வளர்ந்தவர் அல்லவா சசிகலா.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு 33 ஆண்டு காலம் உறுதுணையாக இருந்து கட்சிக்காக தொண்டாற்றி தியாகங்கள் செய்தவர் கழகப் பொதுச் செயலாளர் சசிகலா. கழகத்தின் நலன் காக்கப்பாடு பட்டு வரும் சசிகலாவுக்கும், துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரனுக்கும் என்றென்றும் துணை நிற்போம் என கோடான கோடி தொண்டர்களும், பொதுமக்களும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். -என்றுள்ளது. (ச)

## தினகரன் பிணை மனு மீண்டும் ஒத்திவைப்பு!

புதுடில்லி , மே 23

இரட்டை இலைச் சின்னம் பெறுவதற்காக தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில், தினகரன் தாக்கல் செய்த பிணை மனு மீதான விசாரணையை டில்லி நீதிமன்றம் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

தினகரனின் வழக்கறிஞர் கேட்டுக் கொண்டமையின் பேரிலேயே இந்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டை இலைச் சின்னம் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தினகரன், டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கடந்த வாரம் தினகரன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போதே மனு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ச)

# எதிர்ப்புகளைக் கண்டுகொள்ளாத வடகொரியா: அதிரவைக்கும் உத்தரவைப் பிறப்பித்தார் கிம் ஜாங்!



சியோல், மே 23

வட கொரியா நேற்று முன் தினம் மேற்கொண்ட ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதையொட்டி, சக்தி வாய்ந்த புதிய ஏவுகணைகளை உற்பத்தி செய்ய அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உத்தர விட்டுள்ளார்.

வட கொரியா, உலக நாடுகள் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு குழுவின் எச்சரிக்கையை மீறி கடந்த வாரம் இரண்டு முறை ஏவுகணை சோதனையை நடத்தியது.

இந்த இரண்டு ஏவுகணை சோதனைகளும் வெற்றி பெற்றது. இந்த வெற்றியை தொடர்ந்து சக்தி வாய்ந்த மேலும் சில ஏவுகணைகளை உற்பத்தி செய்ய வட கொரிய தலைவர் கிம் ஜாங் தனது இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சக்தி வாய்ந்த ஏவுகணைகள், அமெரிக்காவுடனான எந்தவொரு மோதலையும் எதிர்கொள்ள சரியானதாக இருக்கும் என கிம் ஜாங் நம்புகிறார்.

மேலும், இது போன்ற ஏவுகணைகள் தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தனது சகாக்களிடம் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

இது குறித்து, வட கொரியாவின் செய்தி நிறுவனமான KCNA தெரிவிக்கையில், வட கொரியா சோதனை செய்து வெற்றி கண்ட புக்க்க் சோங்-2 ரக ஏவுகணை சரியான அளவில் ஜப்பான் கடலில் பாய்ந்தது.

அதைத் தொடர்ந்தே, கிம் ஜாங், இது சிறந்த ஏவுகணை என ஒப்புதல் வழங்கியதாக தெரிவித்துள்ளது.

மேலும், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஏவுகணை சோதனை மூலம், எந்தவொரு போர் நிலையையும் எங்கள் ஏவுகணை சமாளிக்கும் என்பது உறுதியாகியுள்ளது என KCNA கூறியுள்ளது.

இது போன்ற ஏவுகணைகள் முழு பயன்பாட்டுக்கு வந்தால், அமெரிக்காவின் மிகப்பெரிய வெளிநாட்டு கடற்படைத் தளத்தை கூட அது சென்றடையும் என நம்பப்படுகிறது.

## ஆப்கானிஸ்தானில் பொலிஸாரை குறிவைத்து தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 25 பேர் பலி!



காபூல், மே 23

ஆப்கானிஸ்தானில் சோதனைச்சாவடிகளில் கடமையிலிருந்த பொலிஸாரை குறிவைத்து தலிபான் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் 25 பொலிஸார் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் ஜபூல் மாகாணம் ஷா ஜாய் மாவட்டத்தில் உள்ள பல்வேறு சோதனைச்சாவடிகளில் நேற்று பொலிஸார் தங்களது வழக்கமான பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த தலிபான் தீவிரவாதிகள் பொலிஸாரை குறிவைத்து கனரக மற்றும் இலகுரக ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டனர்.

தலிபான்களின் இந்த தாக்குதலிலேயே 25 பொலிஸார் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மேலும், 15 இற்கும் மேற்பட்டோர்பலத்தகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களுக்கு தலிபான் பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் பயங்கர வாதத்திற்கு எதிராகப் போராடி வரும் அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஆப்கானிஸ்தான் படைகளுக்கு இந்த ஆண்டு மற்றொரு சவாலான ஆண்டாக இருக்கும் என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜேம்ஸ்மேட்டிஸ்ஏற்கெனவே எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்கள் தீவிரவாதத்திற்கு எதிராக ஒன்றிணையவேண்டும் என்கிறார் ட்ரம்ப்!



ஜெட்டா, மே 23

தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் அயல்நாட்டு பயணமாக சவூதி அரேபியா சென்றுள்ளார்.

அவருடன் மனைவி மெலினா ட்ரம்ப் உள்ளிட்ட வெள்ளை மாளிகை அதிகாரிகள் சென்றுள்ளனர்.


நேற்றுமுன்தினம், சவூதி அரேபியா மன்னர் சல்மானை சந்தித்து ட்ரம்ப் பேச்சு நடத்தினார்.

அப்போது இருநாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக அமெரிக்காவிடம் இருந்து சுமார் 70 ஆயிரம் கோடி ரூபா அளவுக்கு இராணுவ தளவாடங்களை வாங்க சவூதி அரேபியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதேசமயம் ட்ரம்ப் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார்.

இந்நிலையில், நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ட்ரம்ப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், தீவிரவாதத்திற்கு எதிராக இடம்பெறும் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக அனைத்து நாடுகளும் கைகோக்க வேண்டும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## 20 ஆயிரம் ஆடுகளை பாலியல் உறவுக்காக ஐ.எஸ். அமைப்பிடம் விற்ற விவசாயி!



வெலிங்டன், மே 23

நியூஸிலாந்தை சேர்ந்த விவசாயி ஒருவர் 20 ஆயிரம் ஆடுகளை பாலியல் அடிமைகளாக சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பினரிடம் விற்றுள்ள சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

52 வயதான ஆலன் செயமெர் என்ற விவசாயியே இச்செயலில் ஈடுபட்டுள்ளார்.

சிரியாவில் ஐ.எஸ் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு ஆலன் செயமெர் ஆடுகளை அனுப்பி வந்ததைக் கண்டறிந்த சி.ஐ.ஏ. அதிகாரிகள், நியூஸிலாந்து அதிகாரிகளிடம் இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் ஆடுகளை உணவிற்காக பயன்படுத்தாத ஐ.எஸ். அமைப்பினர், அதை பாலியல் அடிமைகளாக பயன்படுத்தி வந்ததை சி.ஐ.ஏ. அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இதனையடுத்து ஆடுகளை அனுப்பி வந்த விவசாயியை நியூஸிலாந்து அதிகாரிகள் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் பிரேசிலின் இரட்டைச் சகோதரிகள்!



ரியோடிஜெனீரோ, மே23

100 ஆவது பிறந்த நாளை பிரேசிலின் இரட்டைசகோதரிகள் கொண்டாடத் தயாராகி வருகின்றனர்.

தமது பிறந்தநாள் விழாவுக்கு 100 பேரை அழைக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பிரேசில் நாட்டில் கரியா சியா பகுதியை சேர்ந்த இரட்டைச் சகோதரிகள் மரியா பிக்னேடன் பான்டின், பவுலினா பிக்னேடன் பான்டின்.

இவர்களுக்கு 100 வயது ஆகிறது. அதையொட்டி நாளை விழாவை மிக சிறப்பாக கொண்டாட திட்டமிட்டுள்ளனர்.

அதற்கு முன்பு இருவரும் ஒன்றாக இருப்பது போன்று புகைப்படங்களை எடுத்து வெளியிட்டுள்ளனர்.

அந்த புகைப் படங்களை போட்டோ கிராபர் கமீலா லீமா தனது 'பேஸ்புக்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

# 3 ஆவது முறையாக சம்பியன் பட்டம்: மும்பை அணிக்கு 15 கோடி ரூபா பரிசு!



ஐதராபாத், மே 23

ஐ.பி.எல். கிண்ணத்தை மும்பை அணி 3 ஆவது தடவையாக வென்று சாதனை படைத்துள்ளது.

சம்பியன் பட்டம் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு 15 கோடி இந்திய ரூபா பரிசு தொகை வழங்கப்பட்டது.

10 ஆவது ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியில் ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி இறுதிப் பந்து வரை போராடி ஒரு ஓட்டத்தினால் த்ரில் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

ஐதராபாத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான ரைசிங் புனே சூப்பர் ஜெயிண்ட்ஸ் ஆகிய அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களம் இறங்கிய மும்பை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சிமன்ஸ் மற்றும் பார்த்திவ் பட்டேல் ஆகியோர் சிறந்த ஆரம்பத்தைக் கொடுக்கவில்லை.

மும்பை அணி 10 ஓட்டங்களை பெற்றுக்கொள்வதற்குள் இரண்டு விக்கெட்டுகளை இழந்தது. சிம்மன்ஸ் 3 ஓட்டங்களுடனும், பார்த்திவ் பட்டேல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் களம் இறங்கிய ராயுடு 12 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரை தொடர்ந்து மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் ரோகித் சர்மாவும் 24 ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினார்.

இதனால், 56 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து மும்பை அணி தடுமாறியது. வந்த வேகத்தில் சிக்ஸர் விளாசிய பொல்லார்ட்டும் 7 ஓட்டங்களில் அதே ஓவரில் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ஹர்திக் பாண்டியா (10 ஓட்டங்கள்), கேவி. சர்மா (1 ஓட்டம்) ஆகியோரும் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழக்க 79 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது மும்பை இந்தியன்ஸ்.

இதனால், அவ்வணி 100 ஓட்டங்களை எட்டுமா என்ற சந்தேகம் எழுந்தது. எனினும் பின்னர் குணால் பாண்டியா இறுதி வரை நின்று விளையாடி 47 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தில் இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார்.



இதன் காரணமாக, 20 ஓவர்கள் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. புனே அணி தரப்பில் உனத்கண்ட், ஸம்பா, கிறிஸ்டியன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைச் சாய்த்தனர். இதில் உனத்கண்ட் 4 ஓவர்களில் 19 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

இதனையடுத்து, 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய புனே அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரஹானே மற்றும் திரிபாதி ஆகியோர் களம் இறங்கினர்.

மூன்றாவது ஓவரிலேயே 3 ஓட்டங்களுடன் திரிபாதி ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய அணித் தலைவர் ஸ்மித் பொறுமையாக ஓட்டங்களை சேர்க்க, ரஹானே அதிரடியாக விளையாடி 44 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து ரசிகர்களின் ஆரவாரத்தோடு டோனி துடுப்பெடுத்தாட களம் இறங்கினார். ஆனால், 12 பந்துகளில் 10 ஓட்டங்களை எடுத்த அவர் பும்ரா வின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து ரசிகர்களை ஏமாற்றினார். மற்றொரு புறம் ஸ்மித் பொறுமையாக ஓட்டங்களை சேர்த்து ரசிகர்களை வெறுப்பேற்றினார்.

போட்டியின் 18 ஆவது ஓவர் வரை பொறுமையாகவே விளையாடி வந்ததால் வெற்றி இலக்கு தள்ளிக் கொண்டே போனது. கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மிச்சல் ஜோன்சன் பந்து வீசினார்.

முதல் பந்தில் மனோஜ் திவாரி பந்தை பவுண்டரிக்கு விளாசினார். இதனால், 5 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவை என்ற நிலை ஏற்பட்டது.

இரண்டாவது பந்தில் திவாரி பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இதையடுத்து கிறிஸ்டியன் களமிறங்கினார். அப்போது, 4 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

மூன்றாவது பந்தில் ஸ்மித்தும் பிடி கொடுத்து ஆட்டமிழக்க புனே அணியின் சம்பியன் கனவில் கல் விழுந்தது. 3 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் வாஷிங்டன் சுந்தர் களமிறங்கினார்.

நான்காவது பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. இதனால், 2 பந்துகளுக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஐந்தாவது பந்தில் கிறிஸ்டியன் இரண்டு ஓட்டங்களை எடுத்தார். கடைசி பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், கிறிஸ்டியனினால் 2 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதனால், ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பை அணி மூன்றாவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை வென்றது.

அதிகபட்சமாக புனே அணியின் தலைவர் ஸ்மித் 51 ஓட்டங்கள் எடுத்தார். மும்பை அணியின் மிச்சல் ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும், பும்ரா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்தன பயிற்சி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாம்பியன் பட்டம் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு 15 கோடி இந்திய ரூபா பரிசுத் தொகை வழங்கப்பட்டது. மயிரிழையில் ஐ.பி.எல். கிண்ணத்தை இழந்து 2 ஆவது இடத்தை பிடித்த ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணிக்கு 10 கோடி இந்திய ரூபா பரிசாக வழங்கப்பட்டது.

அதிக ஓட்டங்களை எடுத்த வோர்னர் (641 ஓட்டங்கள்) ஒரஞ்சு நிற தொப்பியையும், அதிக விக்கெட் எடுத்த புவனேஸ்வர்குமார் (26 விக்கெட்டுகள்) ஊதா நிற தொப்பியையும் கைப்பற்றினர். ஹைதராபாத் அணியைச் சேர்ந்த இருவரும் தலா 10 லட்சம் இந்திய ரூபா பரிசு தொகையைப் பெற்றனர்.

**விருதுகள்**

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன்

குணால் பாண்டியா - மும்பை இந்தியன்ஸ் (47 ஓட்டங்கள்)

தொடரின் நாயகன்

பென் ஸ்டோக்ஸ் - ரைசிங் புனே சுப்பர் ஜெயிண்ட் (12 போட்டிகள் - 12 விக்கெட்டுகள்)

இந்தத் தொடரில் கண்ணியத்தோடு விளையாடிய அணி- குஜராத் லயன்ஸ்

அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் (ஆரெஞ்சு தொப்பி)

டேவிட் வோர்னர் - சன் ரைசர்ஸ் ஹைதராபாத் (641 ஓட்டங்கள்)

அதிக விக்கெட்டுக்ளைப் பெற்றவர் (ஊதா நிறத் தொப்பி)

புவனேஷ்வர் குமார் - சன் ரைசர்ஸ் ஹைதராபாத் (26 விக்கெட்டுகள்)

மிக விரைவாக அரைச்சதம் கடந்த வீரர்-

சுனில் நரேன், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (15 பந்துகளில் 50 ஓட்டங்கள்)

அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்-

க்ளென் மெக்ஸ்வெல், கிங்ஸ் லெவன் பஞ்சாப்

மிகவும் மதிப்புமிக்க வீரர்-

பென் ஸ்டோக்ஸ், ரைசிங் புனே சுப்பர்ஜெயிண்ட்ஸ்

வளர்ந்து வரும் வீரர்-

பசில் தம்பி, குஜராத் லயன்ஸ்

இந்நிலையில், மும்பை அணியின் வெற்றி குறித்து சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பிரமாதம், சுருக்கமாகக் கூற வேண்டுமெனில் பிரமாதமான ஆட்டம். பிரேக்கில் நாங்கள் கூடி விவாதித்தோம். மஹேல ஓர் அருமையான உரையை நிகழ்த்தினார். அதை நான் இங்கு திரும்பவும் கூற விரும்பவில்லை.

சரியாகச் சிந்திக்க வேண்டும் அதைச் செய்தால் ஆட்டத் திறனை நிகழ்த்திக் காட்டுவது தானாகவே பின் தொடரும். நிச்சயம் வெற்றி பெற முடியும் என்று நம்பினோம், ரோஹித் தும் அணி உறுப்பினர்களும் இதைத்தான் செய்தனர்.

எப்போதும் இந்த மகா வாக்கியத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஒருமுறை சம்பியன் எப்போதுமே சம்பியன் தான். மலிங்க யார்க்கர்களுக்கு பெயர் பெற்றவர். கடந்த 10 ஆண்டுகளாக அவர் மும்பை அணிக்கு தனது ஆட்டத்தை நிரூபித்து வருகிறார்.

இறுதிப் போட்டியிலும் அவர் நிச்சயம் பிரமாதமாக ஆடுவார் என்று கருதினேன். அவருக்கு இந்த சீசன் வழக்கமாக அமைவது போல் அமையவில்லை. ஆனால் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர் என்றால் அது மலிங்காதான் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம்.- என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு அதிர்ச்சி; ஸ்கொட்லாந்து வெற்றி!



மாட்ரிட், மே 20

இலங்கை அணியுடனான உத்தியோகபூர்வமற்ற போட்டியில் 7 விக்கெட்டுக்களினால் அபார வெற்றி பெற்ற டெஸ்ட் அந்தஸ்து இல்லாத ஸ்கொட்லாந்து அணி, தமது கிரிக்கெட் வரலாற்றில் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கு கொள்வதற்காக இங்கிலாந்திற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணி, அத்தொடருக்கு முன்னதாக ஸ்கொட்லாந்து அணியுடன் இரண்டு போட்டிகள் கொண்ட பயிற்சிப் போட்டிகளில் விளையாடி வருகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முதல் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் களம் இறங்கிய இலங்கை அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் தினேஷ் சந்திமால் 79 ஓட்டங்களையும், சாமர கபுகெதர 71 ஓட்டங்களையும், குசல் ஜனித் பெரேரா 57 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். குறிப்பாக, நீண்ட நாட்களின் பின்னர் அணிக்கு திரும்பியிருந்த அணித் தலைவர் மத்தியூஸ் 15 ஓட்டங்களைப் பெற்ற வேளையில், பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

குசல் மென்டிஸ் மற்றும் திசர பெரேரா ஆகியோரும் முறையே 1 மற்றும் 2 இரண்டு ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினர். அதே போன்று, அபார ஆட்டம் காட்டுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட அசேல குணரத்னவும் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் துரதிஷ்டவசமாக 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்து சென்றார்.

ஸ்கொட்லாந்து அணி சார்பாக பந்து வீச்சில் எவன்ஸ் மற்றும் விதின்காம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இலங்கை அணிக்கு பெரும் அழுத்தம் கொடுத்த வீரர்களாகக் காணப்பட்டனர்.

அதன் பின்னர் 288 என்ற வெற்றி இலக்கினை நோக்கித் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய ஸ்கொட்லாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் இணைப்பை உடைப்பதற்கு இலங்கை பந்து வீச்சாளர் பெரிதும் சிரமப்பட்டனர்.

இதன் காரணமாக அவ்வணி 42.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 291 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்று இலங்கை அணிக்கு அதிர்ச்சியளித்தது.

துடுப்பாட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல் கோட்சர் அதிரடியாக ஆடி வெறும் 84 பந்துகளில் 118 ஓட்டங்களை விளாசினார். மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மெத்திவ் குரோஸ் ஆட்டமிழக்காமல் 106 ஓட்டங்களைப் பெற்று இறுதி வரை களத்தில் இருந்தார்.

பந்து வீச்சைப் பொறுத்தவரையில் இலங்கை அணி சார்பில் எந்த பந்து வீச்சாளரும் பிரகாசிக்கவில்லை எனலாம். லக்மால் தவிர்ந்த அனைவரும் ஓட்டங்களை அதிகமாகவே கொடுத்தனர். இந்த வெற்றியின்மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் ஸ்கொட்லாந்து அணி 1-0 என முன்னிலையில் உள்ளது.

## யாழ். மாணவிக்கு ஜனாதிபதி விளையாட்டு விருது!




கனிஷ்ட பிரிவில் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான ஜனாதிபதி விருதை யாழ். பளுதூக்கல் வீராங்கனையும், ஈண்டுக்குளி மாணவியுமான வி. ஆஷிகா பெற்றுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் வி. ஆஷிகாவுக்கு இந்த விருது வழங்கப்பட்டதுடன், பயிற்றுநருக்கான இரண்டாவது விருது அவரின் பயிற்றுநரும் தந்தையுமாகிய இ.விஜயபாஸ்கருக்கு வழங்கப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில்

## கிரிக்கெட் வீரர்களின் உபாதைகளை தடுப்பதற்கான விழிப்புணர்வு பட்டறை!



கொழும்பு, மே 20

கிரிக்கெட் வீரர்களின் உபாதைகளை தடுத்தல் மற்றும் உபாதைகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பிலான சிறப்பு பட்டறை ஒன்றினை இலங்கை கிரிக்கெட் சபை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கின் ஆலோசகராக ஆஸ்திரேலியாவின் முன்னாள் ஒலிம்பிக் நீச்சல் வீரரான வைத்தியர் நிக்கலஸ் ஸ்ப்ரிங்கர் கலந்துகொண்டுள்ளார்.

தொடர் உபாதைகள் மற்றும் நோய்களை கண்டறிவதிலும் அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளிலும் நிக்கலஸ் ஸ்ப்ரிங்கர் நிபுணத்துவம் மிக்க வைத்தியராவார்.

அத்துடன், அவர் கால் மற்றும் பாதங்களில் ஏற்படும் உபாதைகளுக்கான அறுவை சிகிச்சைகள் மற்றும் உடற்பயிற்சி சிகிச்சைகளிலும் புகழ் மிக்க வைத்தியராவார்.

ஸ்ப்ரிங்கர், ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து தடகள விளையாட்டு சங்கத்துடன் இணைந்து கடமையாற்றி வருகிறார். குயின்ஸ்லாந்து ரக்பி லீக் தொடரில் நடுவராகவும், ஆஸ்திரேலிய கால்பந்தாட்ட அணியான பிரிஸ்பன் லயன்ஸ் அணியுடன் இணைந்தும் அவர் செயலாற்றி வருகின்றார்.

பெரும்பாலான கிரிக்கெட் வீரர்கள் கணுக்கால், பாதம் அல்லது உள்ளங்கால் பகுதிகளில் உபாதைகளுக்கு உள்ளாவது பொதுவான விடயமாகும். இதன் காரணமாக இது போன்ற வழக்கமான தொடர் உபாதைகளை தடுக்கும் நோக்குடன் இப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது ஒவ்வொரு வீரர்களும் ஏறத்தாழ 30 நிமிடங்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். அவர்களுக்கான உடற்பயிற்சி சிகிச்சையும் வழங்கப்பட்டது. மேலும் நவீன மருத்துவ பரிசோதனை முறைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் அனுகூலங்கள் வீரர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

இலங்கை அணியின் உடற்கட்டு மற்றும் மறுசீரமைப்பு பயிற்சிகளின் முகாமையாளரான நிர்மலன் தனபாலசிங்கம் இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

இப்பட்டறை எமக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். வைத்தியர் ஸ்ப்ரிங்கரின் அறிவு மற்றும் அனுபவம் எமக்கு பயனுள்ளதாக அமைந்தது. இது எமது வீரர்களுக்கு எதிர்காலத்தில் கைகொடுக்கக் கூடியதாக காணப்படும்.

ஒரு வகையில் இதனை எதிர்காலத்திற்கான முதலீடு எனக் கூறலாம். உபாதை ஒன்று ஏற்படும் பட்சத்தில் அதன் விளைவினை குறைத்து, துரிதமாக நிவர்த்தி செய்வது பற்றி எமக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

வீரர்களும் இவ்விடயம் குறித்து சிறந்த அறிவைக் கொண்டிருப்பது அவசியமாகும். 1999 ஆம் ஆண்டிற்கு பின்னர் வீரர்களின் உடற்கட்டு தொடர்பில் இவ்வகையிலான பட்டறை ஒன்றை இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால ஏற்பாடு செய்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரியது. தொலைநோக்கு மிக்க ஒரு திட்டமான இந்த நிகழ்வு எதிர்காலத்தில் பயனுள்ளதாக அமையும் என நான் நினைக்கின்றேன்.- என்றும் தெரிவித்துள்ளார்.

உள்ளங்கால் மற்றும் கணுக்கால் பகுதிகளில் உள்ள மெல்லிய தசைகள் மற்றும் தசை நார்கள் உபாதைகளுக்கு உள்ளாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனும் காரணத்தினால், கிரிக்கெட் வீரர்கள் மட்டுமன்றி ஏனைய விளையாட்டு வீரர்களும் பாதங்களில் ஏற்படும் உபாதைகள் தொடர்பில் விழிப்புடன் இருப்பது மிகவும் அவசியமானதாகும் என்றும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 9 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படையினரும் இணைந்து நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்துத் தலைமன்னார் துளுக்குடியிருப்புப் பகுதியில் இணைந்து சுற்றிவளைப்பில் ஈடுபட்ட கடற்படையினரும் பொலிஸாரும் இந்தக் கஞ்சாப் பொதியை மீட்டனர்.

கஞ்சாக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அவர்கள் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேக நபர் மேல் விசாரணைகளுக்காக மன்னார்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## 327 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையினருக்குக் கிடைத்த முறைப் பாட்டைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்துக்குரியவர்கள் தங்கியிருந்த வீட்டிலிருந்து 327 கிலோ கிராம் கேரளக் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருளை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றும் 3 கையடக்கத் தொலைபேசிகளும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் கேரளக் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மைக்ரோ ரக கைதுப்பாக்கி ஒன்றும் அதற்காக பயன்படுத்தப்பட்ட ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## திருகோண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த இளைஞரை முதலை இடுப்பில் கவ்வி இழுத்துச் சென்றபோது அவருக்கு அருகில் இருந்த மற்றைய இரண்டு இளைஞர்களும் அவரை முதலையின் பிடியிலிருந்து விடுவிக்கப் போராடினர் என்றும் கூறப்படுகின்றது.

முதலை இழுத்துச் சென்ற இளைஞரைத் தேடும் முயற்சி நேற்றுப் பகல் இடம்பெற்றது. (உ)

## ரவியின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மங்கள சமரவீர நிதி அமைச்சுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

நிதி அமைச்சுப் பதவியைக் கைவிட மறுத்து விடாப்பிடியாக இருந்த ரவி கருணாநாயக்கா நேற்று முன்தினம் இரவிரவாக நடந்த பல சுற்று அரசியல் பேச்சுக்களை அடுத்து, நேற்று அதிகாலையில் மாற்றத்துக்கு இணங்கி, இறங்கிவந்தார் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் எம்.பியான திலக் மாரப்பன மீண்டும் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஊடகத்துறை அமைச்சராக இருந்த கயந்த கருணாதிலக காணி, நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராகப் பதவியேற்றார்.

புதிய நிதி அமைச்சரான மங்கள சமரவீர அதற்கு மேலதிகமான ஊடகத்துறை அமைச்சராகவும் பதவியேற்றார்.

தற்போதைய கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அதற்கு மேலதிகமாக மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றார். (உ)

## கைதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முக்கிய அரசியல்வாதி ஒருவர் ஊடாகவே வண.ஞானசாரதேரர் அமைச்சர் மனோவிடம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார் என அறிய வந்தது.

அதன்படி சம்பந்தப்பட்ட அரசியல்வாதி அமைச்சர் மனோவை அணுகினார் எனவும், அச்சமயம் அமைச்சர் மனோ உரிய பதிலை வழங்கினார் எனவும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

"சட்டம் நாட்டின் அனைவருக்கும் சமம். அது வீறுநடை போட்டால் மாத்திரமே ஜனநாயகம் கோலோச்சும். எனவே, சட்டத்தைக் கையிலெடுத்துச் செயற்பட எவருக்கும் அனுமதியளிக்க முடியாது. நாம் அமைதியாக இருப்போம். அஹிம்சை வழி நடப்போம். அநீதியென வந்துவிட்டால் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்." - என்றும் வண. ஞானசாரதேரரின் செய்தியை எடுத்து வந்த அரசியல்வாதியிடம் இடித்துரைத்துள்ளாராம் அமைச்சர் மனோ கணேசன்.

தேசிய கலந்துரையாடல், சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் அலுவலகத்துக்கு அண்மையில் சென்றிருந்த வண. கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான பிக்குகள் குழுவினர், அமைச்சர் மனோவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டமையுடன், இலங்கை சிங்கள, பௌத்தர்களுக்குரிய நாடு எனவும் வாதிட்டிருந்தனர்.

இதற்கு அமைச்சரும் உரிய பதிலடியை மகாவம்ச வரலாற்றைக்கூறி எடுத்தியம்பினார். அத்துடன், வண.ஞானசார தேரர் குறித்து அமைச்சரவையிலும் தாம் பேசவுள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (உ)

## முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துக்கு முன்பாகவுள்ள - இறக்காமம் பகுதி முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான - 'அஸ்வர் உணவகம்' நேற்று அதிகாலை தீப்பிடித்து எரிந்தது. எனினும், பொதுமக்களும், பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, நேற்று அதிகாலை 4.30 மணிக்கு கொழும்பு மீரிஹான, நுகேகொட - விஜேராம பகுதியில் உள்ள - முஸ்லிம்களுக்குச் சொந்தமான - தளபாடங்கள், 'குஷன்' விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

காலி, பெந்தோட்டை, ஊஸ்பிட்டியப் பிரதேசத்தில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் நேற்றுமுன்தினம் அதிகாலை எரிந்து நாசமாகியுள்ளது.

பேருவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்தக் கடைக்கு முன்புறம் ஊடாக ஒருகுழாயை உள்செலுத்தி அதனூடாகத் தீயை உள்ளே பரவவிட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் குருநாகல் பகுதியில் பள்ளிவாசலொன்றின் மீதும் எரிகுண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்றிருந்தது தெரிந்ததே. (உ)

## சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிங்கள ராவண, பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் அண்மைக்காலமாக முஸ்லிம்களையும், அவர்களின் மதவிழுமியங்களையும் கொச்சைப்படுத்தும் விதத்தில் பகிரங்கமாக வெளியிட்டு வரும் கருத்துத் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்காமல் மௌனம் சாதித்து வருவதாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்த நிலைமை நீடித்தால் தாங்கள் அரசிலும், கூட்டு எதிரணியிலும் இருந்து விலகி, நாடாளுமன்றத்தில் தனியான குழுவாக அமர வேண்டிவரும் என்றும் முஸ்லிம் எம்.பிக்கள் அறிவித்துள்ளனர்.

எனினும், அத்தகைய நடவடிக்கை அவசியமற்றது, இவ்விடயம் குறித்து அரசு விரைந்து - உரிய - நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்திருக்கின்றார்.

முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த, சிங்களப்பேரினவாதத்தின் இனவாதப் பிரசாரம் மோசமடைந்திருக்கின்றமை குறித்து முஸ்லிம் எம்.பிக்களும், அமைச்சர்களும் கடந்த வெள்ளியன்று ஒன்று கூடி ஆராய்ந்திருக்கின்றார்கள்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியையும், பிரதமரையும் நேரில் சந்தித்துப்பேசவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதற்கிடையில் -

சட்டம்-ஒழுங்கு மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்காவை முஸ்லிம் அமைச்சர்கள் நேரில் சந்தித்து இவ்விடயம் குறித்துப் பேசினர். இந்த உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்றுக் காலை அலரி மாளிகையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராகப் பொலிஸாரும், அரசாங்கமும் செய்யவேண்டிய கடமையைச் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது எனக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

பொதுபலசேனா, சிங்கள ராவண போன்றவை குறித்து அரசுத் தலைமை தீர்க்கமானதும், உறுதியானதுமான நடவடிக்கை எடுக்கத் தவறுமானால் முஸ்லிம் எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களின் கடும் எதிர்ப்பை அரசு சந்திக்கவேண்டி வரும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

## உண்ணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்து, அதை ஆட்சேபித்து கண்டி மல்வத்து விகாரையில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த வண. ஞானசாரதேரர் அதைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேற வேண்டியவரானார்.

'மேற்படி விகாரையில் உண்ணாவிரதத்தை முன்னெடுப்பதற்கு அனுமதிக்கமுடியாது' என அஸ்கிரிய பீடாதிபதி பணிப்புரை வழங்கியமையை அடுத்தே வண.ஞானசார தேரர் அங்கிருந்து புறப்பட வேண்டியவரானார்.

அவர் எங்கிருக்கின்றார் என்பதை அறிவதற்கு ஊடகவியலாளர்கள் சிலர் நேற்று மாலை எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று கூறப்பட்டது. (உ)

# மனோகணேசனின் கருத்தால் சீற்றமடைந்தார் சிவாஜிலிங்கம்

### மனோ இனி நாகரிகமாகச் செயற்படவேண்டும்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோகணேசன் நாகரிகமான முறையில் கருத்துக்களை வெளியிட வேண்டும் என, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பொறுப்புடைய அமைச்சராக இருக்கவேண்டிய அவர் வண. ஞானசார தேரருடன் என்னை ஒப்பிட்டுப்பேசியுள்ளார். அவரது இந்தக்கருத்து மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதற்கு ஒப்பானது எனவும் அவர் கூறினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுபலசேன தென்னிலங்கையில் கடும்போக்குவாத, இனவாத அமைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அதன் தலைவராக இருக்கின்ற ஞானசார தேரர் இனவாதக்கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமையுடன் இனவாத ரீதியான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார்.

இந்நிலையில் அமைச்சர் மனோகணேசன் என்னையும் ஞானசார தேரரையும் ஒப்பிட்டு கருத்துக் கூறியமை தவறு.

மனோகணேசன் மலையக மக்களின் தலைவர்களில் ஒருவராக இருக்கின்றார். நாங்களும் மலையக மக்களுக்கு ஆதரவாகவே செயற்பட்டுவருகின்றோம். அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டதில்லை.

இவ்விருக்கையில் மனோ கணேசன் இனிமேல் என்னைப் பற்றி தேவையற்ற வகையில் கருத்துக் கூறுவதைத் தவிர்த்து நாகரிகமான முறையில் செயற்படவேண்டும். - என்றார். (ம)

# யாழ்தேவி ரயிலில் பாய்ந்த பாடசாலை மாணவன் பலி!

### அனுராதபுரத்தில் நேற்று சம்பவம்

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயிலில் பாய்ந்து மாணவன் ஒருவர் தற்கொலை செய்துள்ளார் என அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனுராதபுரத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் சிரேஷ்ட மாணவ தலைவர் ஒருவரே நேற்று இவ்வாறு தற்கொலை செய்தார் எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில், வணிக பிரிவில் தோற்றவிருந்த, அனுராதபுரம் புது மாவத்தையில் வசிக்கும் பிஷான் ஜயவர்தன (வயது 18) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம)

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் நேற்று டெங்கு ஒழிப்பு சிரமதானம்

முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை பணியாளர்களும், முள்ளியவளைப் பொலிஸாரும் இணைந்து நேற்றுக் காலை மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து அரச அலுவலகங்களிலும் தினமும் அரை மணித்தியாலம் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் விடுத்த அறிவுறுத்தலுக்கு அமையவே இந்தச் செயற்பாடு நேற்று ஆரம்பமானது எனக் கூறப்பட்டது. (ம-81)

# சிங்கள - முஸ்லிம் மோதலுக்கு சூட்சும நடவடிக்கை முன்னெடுப்பு

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

தெற்கில் சிங்கள - முஸ்லிம் மோதலுக்கு அடிகோலுவதற்கு சூட்சும நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தமிழீழ அடிப்படைவாதப் பிரிவினரால் மனித படுகொலை வாரம் அனுஷ்டிக்கப்படும் தருணத்தில், யாழ்ப்பாணத்தில் பொலிஸ் வாகனத்திற்கு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவு செய்யப்பட்டு 8 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார். (ம)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதி அமைச்சர்கள் ரஞ்சன் ராமநாயக்கவும் அஜித் பி.பெரேராவும் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சர்களின் பட்டியலிலும் மாற்றம் வருமென அவர்கள் தெரிவித்தனர். (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளிவிவகார அமைச்சர்.

மஹிந்த சமரசிங்க - துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சர்.

கயந்த கருணாதிலக - காணி, நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

அர்ஜுன ரணதுங்க - பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

சந்திம வீரக்கொடி - திறன் விருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர்.

திலக் மாரப்பன - அபிவிருத்தி பணிகள் அமைச்சர்.

மஹிந்த அமரவீர - மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர். (ஏற்கனவே உள்ள மீன்பிடித் துறை அமைச்சுடன்)

# இலங்கை மருத்துவத்துறையில் விசேட மருத்துவர் பற்றாக்குறை

## அத்துறையிலுள்ளோர் வெளிநாடுகளுக்கு செல்வதே காரணம் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, மே 23

இலங்கை மருத்துவத் துறையில் விசேட மருத்துவர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றதுஎன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்தச் சேவையில் உள்ளவர்களில்வருடாந்தம் வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை இதற்கு முக்கிய காரணம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின்புதியபோதனா வைத்தியசாலையை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலவச சுகாதார சேவையைப்பலப்படுத்துவதற்கு பங்களிக்கவேண்டியது அனைவருடையவும் பொறுப்பாகும். இந்தத் துறையில் உள்ளவர்களில் வருடாந்தம் வெளிநாடுகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் விசேட மருத்துவர்களுக்கான பற்றாக் குறை நிலவுகின்றது. அப்படி வெளிநாடுகளுக்குச் செல்வோரை தடுத்து வைத்துக் கொள்வதற்கான வழிகள் இல்லை. எனினும் மக்களுக்கு இலவச சுகாதார சேவை மற்றும் இலவசக் கல்வியின் நன்மைகளை பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைத்து பிரஜைகளினதும் பொறுப்பாகும்.

வேரஹெர பிரதேசத்தில் 15 ஏக்கர் நிலப் பரப்பில்நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வைத்திய சாலை, 20 விசேட சிகிச்சை நிலையங்கள், 814 கட்டில்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் கொண்ட முழுநிறைவான சர்வதேச தரம்வாய்ந்த வைத்தியசாலையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.-என்றார். (எ)

## இஸ்ரேல் சுற்றுலா அமைச்சர் லிவின் வருகிறார் இலங்கைக்கு!



கொழும்பு, மே 23

சுற்றுலாத்துறை அமைச்சர்ஜோன்அமரதுங்கவின்அழைப்புக்கு இணங்க இஸ்ரேலிய சுற்றுலாதுறை அமைச்சர் யாரிவ் லிவின் இலங்கை வரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவில் இரு நாட்டு சுற்றுலாத் துறை அமைச்சர்களும் சந்தித்த போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேலிய சுற்றுலாத் துறை அமைச்சரின் வருகையை அடுத்து அந்நாட்டின் சுற்றுலாத்துறையினர் இலங்கைக்கு வருகை தரக்கூடிய ஏதுநிலை இருப்பதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர இலங்கை மற்றும் இஸ்ரேலுக்கு இடையே நேரடி ஒழுங்குப்படுத்தப்பட்ட வானூர்தி சேவைகளை மேற்கொள்ள முடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ)

## வவுனியாவில் 88 நாளாகத் தொடரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம்



வவுனியா, மே 23

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று 88 ஆவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வவுனியா மத்திய அஞ்சல் அலுவலகத்துக்கு அருகே மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் போராட்டம் கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக் கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் மற்றும் அவசரகால சட்டத்தை நீக்குமாறு கோரியும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (எ)

## அம்பன் கடற்கரைப் பகுதியில் மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு!

வடமராட்சி, மே 23

வடமராட்சி - அம்பன் கடற்கரைப் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள மணல் அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

மருதங்கேணி பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட அம்பன் கடற்கரைமணல்மேட்டிலிருந்து கடந்த பல வருடங்களாக மண் அகழ்வு இடம்பெற்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் மக்களின் எதிர்ப்புக்களையும் மீறி அம்பன் கடற்கரை மணல் மேட்டிலிருந்து மண் அகழப்பட்டது. எனினும், புதிய அரசு ஆட்சிக்கு வந்ததையடுத்து இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் மணல் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின் பெரும் அபாயங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே பெருமளவான மண் அகழப்பட்ட நிலையில் தற்போது மருதங்கேணி பிரதேச செயலகத்தினூடாக மணல் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவிக்கையில்:-

'பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்கள் இணக்கம் தெரிவித்தால் மாத்திரம் மணல் அகழ்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்'.- என்றார். (எ)




## 19 ஆவது நாளாகவும் தொடர்கின்றது சுகாதாரத் தொண்டர்களின் கவனயீர்ப்பு

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த 4 ஆம் திகதி பிராந்திய வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாக வவுனியா சுகாதாரத் தொண்டர்கள் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம் 19ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

வடக்கில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய சுகாதார தொண்டர்களே இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (எ)

## மாகாண சபைகளின் பதவிக் காலங்களை நாடாளுமன்ற அனுமதியின்றி நீடிக்க முடியாது

### பவ்ரல் அமைப்பு கூறுகிறது

மாகாணசபைகளின் பதவிக் காலத்தை நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையின்றி நீடிக்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறானதொரு விசேட சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் நிச்சயம் தோற்கடிக்கப்படும் என்று நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தல்களைக் கண்காணிக்கும் (பவ்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பின்தலைவர் ரோகண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைகளின் பதவிக் காலம் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கான பதவிக் காலத்தை மேலும் நீடிக்கும் வகையிலான விசேட சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் தற்போதைய சூழலில் அந்தச் சட்டமூலம் நிச்சயமாகத் தோற்கடிக்கப்படும்.

இந்நிலையில் மாகாண சபைகளின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான விசேட சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுமாயினும், அதன்பின்னர் அந்த விசேட சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து ஆலோசனைகள் முன் வைக்கப்படுவதற்காக உயர் நீதி மன்றத்தில் அந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்.

உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்தச்சட்ட மூலத்துக்கான அங்கீகாரத்தை பெறும் பொருட்டு அதனை மக்கள் கருத்தறிய உயர் நீதிமன்றத்தால் முன்வைக்கப்படும்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் மாகாணசபைகளின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு நாட்டு பிரஜைகள், சிவில் அமைப்பினர் மற்றும் புத்திஜீவிகள் இதற்கு தமது எதிர்ப்பையே நிச்சயம் வெளிப்படுத்துவர். மக்களது ஆதரவின்றி அந்த சட்டமூலம் நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்படுவது சாத்தியமற்ற விடயமாகும்.-என்றார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளநிலையில் இது வரையில் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதால் நல்லாட்சி அரசின் மீது கூட்டு எதிரணி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதுடன் தேர்தல்கள் தொடர்ந்தும் காலத்தாமதப்படுத்தப்படுகின்றமையால் மக்களின் அடிப்படை உரிமைகளிலும் பாதிப்பேற்பட்டுள்ளதாகவும் சிவில் அமைப்புக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தலைவர்களினால் பயனில்லை

# உரிமையைப் பெற போராடுவதே வழி!

### கஜேந்திரகுமார் விளக்கம்



மக்கள் தமது போராட்டத்தினால்தான் தமது உரிமைகளை பெற்று வருகின்றார்களே தவிர, வேறு எவரும் அதனைப் பெற்றுக்கொடுக்கத்தயாராக இல்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.


இரணைதீவு பூர்விக மண்ணில் மீள்குடியேற்றம் செய்யுமாறு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது, ஊடகங் ளிற்கு கருத்து தெரிவித்த சமயமே கஜேந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

தமது பூர்வீக மண்ணில் குடியேறுவதற்காக மக்கள் இன்று வீதியில் இறங்கி போராடுகின்றனர். இவ்வாறு மக்கள் போராட்டத்தினால் தமது உரிமைகளை பெற்று வருகின்றார்களே தவிர, வேறு எவரும் பெற்றுக்கொடுக்கத் தயாராக இல்லை. மக்கள் வீதியில் இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று நாட்டின் பிரதமரை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று உறவினர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இருவரும் ஒரே வானூர்தியில் பயணித்துள்ளனர். இவ்வாறு மிக நெருக்கமான உறவை வைத்திருக்கும் அவர்கள் மக்களிற்காக எதையும் பேசியவர்களாகத் தெரியவில்லை.

கடந்த சில மாதங்களிற்கு முன்னர் இவ்வாறு மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் தனது மகளின் பிறந்த நாளிற்கு ஜனாதிபதியை அழைத்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

இவ்வாறு மக்களை வீதிகளிற்கு கொண்டு வந்துவிட்டு அரசதலைவர்களுடன் நெருக்கமாக உறவு வைத்திருப்பவர்கள், வீதிகளில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் குறித்து என்றும் சிந்தித்தது கிடையாது. இந்த உண்மையை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வெறுமனே மக்களின் வாக்குகளுக்காக அவர்களின் வீடுகளிற்கு செல்பவர்கள், பின்னர் மக்களை மறந்து தமது நெருக்கமான உறவை அரச தலைவர்களுடன் கொண்டுள்ளனர். உண்மையை மக்கள் உணர்ந்து எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார்.




## பனிக்கன்குளம் சந்தியில் விபத்து: ஒருவர் படுகாயம், கார் கடும் சேதம்





மாங்குளம் பனிக்கன்குளம் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மேற்படி சந்தியில் நிறுத்தப்பட்டிருந்த கன்ரர் வாகனத்துடன் பின் பக்கமாக வந்த சொகுசுக் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் கார் மோசமாகச் சேதமடைந்தது. தெய்வாதீனமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படாத போதிலும் காரில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்தார்.

அவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார். இந்த விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-81)


சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

விசேட கட்டணக்கழிவில் கற்போம்

*Mobile Phone Repairing, *AutoCAD, *Revit *3D Max, Maya*Multimedia, MCSE-USA, MS office, Organ-Keyboard( Srikugan Sir)

கற்றால் நாளாந்தம் ரூபா10,000க்கு மேற்பட்ட வருமானத்தை ஈட்டக்கூடிய கற்கைநெறிகள்.
(*2 நாட்களில் பூரணமாக பூர்த்தி செய்வதற்கான உத்தரவாதம்)

Offer Valid Till 25th May 2017

Qualified Lectures From American Institute-AICT-Colombo

10% Discount All Debit & Credit Card Payment

முன்பதிவுகளுக்கு 775520940

கல்வியங்காட்டு சந்தியில் MCAI Campus

Official Web Site : www.mcai.edu.lk



# இரு தீபங்களின் ஆண்டு நினைவு

10 ஆம் ஆண்டு நினைவு

பிறப்பு 15 - 10 - 1935



இறப்பு 19 - 12 - 2006

அமரர்

**கந்தையா சண்முகம்**

திதி : தேய்பிறை சதுர்த்தசி

"மாற்றம் எதையும் மாற்றும்
மாற்றம் மட்டும் மாறாது.
ஏற்றம் தந்த தாய், தந்தை
என்றும் அன்பு மாறாது!"

முதலாம் ஆண்டு நினைவு

பிறப்பு 27 - 03 - 1945



இறப்பு (ஜேர்மனி) 02 - 06 - 2016

அமரர்

**சண்முகம் புஸ்பவதி**

(குஞ்சுக்கிளி)

திதி : தேய்பிறை திரயோதசி

அவர்களின் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று (23-05-2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவர்களின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நதியா நகை மாடம் (துவம்)
புதிய நதியா நகை மாடம்
(மண்கும்பானூர் கண்ணன்)
321, 323, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்களால் ஏற்றம் காணும்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் ... 23.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.